

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 மேழும் நல்லோரை சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் (01-05-2026 வெள்ளிக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



தருமை ஆதீன சைவசித்தாந்த மையத் தொடக்க விழா – யாழ்ப்பாணம்

# தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள்
# தென்னாட்டில் எழுந்தருளல்











# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# சைவமும் தமிழும் புலம்பெயர் தமிழரும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

சைவத் தமிழ் வளர்ச்சியில் புலம்பெயர் தமிழரின் பங்கு மிகவும் காத்திரமானதும் மற்றும் இன்றியமையாததுமாகும். ஈழத்தமிழ்ப் பரப்பில் அன்றுமுதல் இன்றுவரை புலம்பெயர் தமிழரின் வகிபாகம் மிக உயர்வான இடத்தில் வைத்தே பார்க்கப்படுகின்றது. கோயில்களாக இருந்தாலும் சரி, பாடசாலை வளர்ச்சியாக இருந்தாலும் சரி, போருக்கு முன்னர் பின்னரான மக்கள் நலப்பணிகளாக இருந்தாலும் சரி, தமிழ் வளர்ச்சிப் பணிகளாக இருந்தாலும் சரி, கல்வி வளர்ச்சியானாலும் சரி, இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானமாக இருந்தாலும் சரி, உலகளாவிய பரப்பில் தமிழர் பெருமைகளை கொண்டுசென்று சேர்த்தமையாக இருந்தாலும் சரி, உலக தலைவர்களிடையேயான தொடர்புகள் மற்றும் தொடர்பாடல்களாக இருந்தாலும் சரி, புலம்பெயர் நாடுகளெங்கும் நூறுக்கும் மேற்பட்ட கோயில்களை கட்டி மேன்மைகொள் சைவநீதியை உலகமெலாம் பரவச் செய்தமையானாலும் சரி, உலகெங்கும் தமிழர் பரவி வாழும் நாடுகளில் தமிழ் பாடசாலைகள், தமிழ்ச் சங்கங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், ஊர்க்கோயில் சங்கங்கள் மற்றும் ஊர்ச் சங்கங்கள் என்று ஒரு ஆலின் விழுதுகள் போலஎங்கள் பண்பாட்டினை வியாபிக்கச் செய்தது அவர்களே.

குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டுவது என்று சொல்லுவார்கள், அதுபோல் அனுபவம் இல்லாத, உலகப் பரவலாக்கல் மாற்றங்களை அறியாதவர்கள், பரந்த உலக அறிவினைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் , மற்றும் சிலர் அறிந்தும் தங்கள் இருப்பிற்காக வேண்டி, பல இடங்களில் சில புலம்பெயர் தமிழரைச் சாடுவதுபோல், புலம்பெயர் தமிழர்களை வசை பாடுவது அவர்களின் முதிர்ச்சியின் படிநிலையையே காட்டுகின்றது.

இலங்கையில் உள்ள ஈழத்தமிழருக்கு புலம்பெயர் தமிழர்கள் பெருளாதாரப் பலம் மட்டுமல்ல பெரியதொரு அரசியல் மற்றும் பண்பாட்டுப் பலமும் என்றே கூறவேண்டும். நாடென்ற வகைக்கு அப்பால் பல குடும்பங்களுக்கு அவர்கள் தூண்களே. குடும்பங்களுக்கு பொருளாதார உதவி மட்டுமல்ல, இலங்கையில் உள்ள ஒவ்வொரு தாயும் வெளிநாட்டில் உள்ள தன் சகோதரம் மற்றும் உறவினரிடம் கேட்பது **“என்ர பிள்ளையை ஒருக்கா அங்கால எடுத்துவிடு”** என்பது மட்டுமே. பல ஆண்டுகளாக அது சரிவராமல் போக, கடைசியா கேட்பது, **“தம்பி பெடியன் ஒன்றுமில்லாமச் சுத்திறான், வான் ஒன்று எடுத்தால் அதை ஓடியாவது பிழைப்பான், ஒருகோடியாவது வேணும், பாத்துக்கீத்து ஏதாவது செய்யப்பு”.** அப்படி இது ஒரு பின்னிப்பிணைந்த விழுதுகள்.

ஆகவே புலம்பெயர் தமிழர்களின் ஈடுபாடு, இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு என்றும் பெரும் உதவியாகவே இருக்கிறது. குறிப்பாக பண்பாடு சார் புலத்தில் பெருமளவு மேம்பாடுகளை அவர்களே செய்கிறார்கள் அல்லது துணை நிற்கிறார்கள். மனிதர்கள் பிழைகள், குறைகள் விடுவது வழமை ஆனால் அது அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதைப் பொறுத்து மாறுபடுவதில்லை. பிழைகளுக்குக் காரணம் அறியாமையே. அண்மையிலும் கூட, மண்கும்பான் மற்றும் தாவடியில் சில கோயில் திருவிழாக்களில் கதகளி நடனம், செண்டை மேளம் என்று தற்போதைய கேரளப் பண்பாட்டினை திருவிழாக்கள் ஊடாக ஊடுகடத்தி வருகின்றனர். இது சரியா பிழையா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

ஆகவே புலம்பெயர் தமிழர்களின் தொடர்ச்சியான உதவிகள், மேம்பாடுகள், வழிகாட்டல்களை சரியாக இருக்குமிடத்தில் அவற்றை எடுத்துக்கொண்டது , இவர்கள் யார் எங்களை கேள்வி கேட்பது என்ற மனநிலையைப் புறந்தள்ளி ஒரு இனமாக எங்களை நாங்களே செதுக்கிக்கொள்வோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(01-04-2026) – தென்னாட்டின் அறுபத்து எட்டாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299, மீனம் நல்லோரை, பங்குனித் திங்கள் 18 ஆம் நாள் (01.04.2026 – புதன்கிழமை) பங்குனி உத்தர நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். திருநாவுக்கரசு வேல்நம்பி ஐயா அவர்கள், மேனாள் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவத்திரு. அ. அகிலாதாஸ் ஐயா அவர்கள், இலண்டனைச் சேர்ந்த அரும்பு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு மையத்தின் தலைவர் சிவத்திரு. நடராச சச்சிதானந்தன் ஐயா அவர்கள், ஐகோன்ஸ் மென்பொருள் நிறுவனத்தின் முதல்வர் சிவத்திரு. குலசேகரம் ஜெயராஜ் அவர்கள், கட்டட வடிவமைப்பாளர் சிவத்திரு. தவச்செல்வம் சிற்பரன் அவர்கள், இலண்டன் அபயம் அமைப்பின் முதல்வர் சிவத்திரு. சதாசிவம் மங்களேஸ்வரன் அவர்கள் ஆகிய சிறப்பு விருந்தினர்களும் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். திருநாவுக்கரசு வேல்நம்பி ஐயா அவர்கள், இலண்டனைச் சேர்ந்த சிவத்திரு. நடராசா சச்சிதானந்தன் ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து எட்டாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள துணைவேந்தர் பேராசிரியர். திருநாவுக்கரசு வேல்நம்பி ஐயா அவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் வருகை தந்திருந்த அனைத்து விருந்தினர்களும் துணைவேந்தர் அவர்களினால், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டிருந்தனர். மேலும் சிறப்பு நிகழ்வாக, எங்கள் சிவமடத்தில் பூசை வழிபாடுகள் ஆற்றி வரும், தென்னாடு செந்தமிழ் அர்ச்சகர் பிறைசூடன் அவர்கள், கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமையிட்டு, துணைவேந்தர் அவர்களினால் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(06-04-2026) – தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கையிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், கடந்த 06.04.2026 அன்று யாழ்ப்பாணம், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருளாசி வழங்கியிருந்தார்கள்.

(11-04-2026) – அமரர். சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரன் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் சிட்னியில் தென்னாடு முதல்வர் அவர்களினால் ஆற்றி வைக்கப்பட்டன. (11-04-2026) – எங்கள் மடத்தின் பொருளாளர் திருமதி. பிரியவதனி அகல்யன் அவர்களின் இரண்டாவது மகனுக்கு, ஆருத்திரன் என்ற சிவப்பெயர் சூட்டி, புனிறு நீக்கல் மற்றும் தொட்டிலிடல் வழிபாடுகளும் ஐம்பூதநாதர் அருளுடன் சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்டன. (14-04-2026) – அருட்டோற்றம் புத்தாண்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (14-04-2026) – தென்னாடு முதல்வர் அவர்களின் இல்லத்திற்கு, சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகள் எழுந்தருளி அருளாசி வழங்கியிருந்தார்கள்.

(15-04-2026) – சித்திரைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (15-04-2026) – தென்னாடு மேனாள் தலைவர் சிவத்திரு. அமிர்தலிங்கம் லதாங்கன் அவர்களின் தந்தையாரின் திருவடிப்பேற்று வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (18-04-2026) – சிட்னியில் புதுமனைப் புகுவிழா ஒன்று செந்தமிழ் ஆகம முறையில் மந்திரங்கள் மற்றும் திருமுறை ஓதி ஆற்றி வைக்கப்பட்டது. ((28-04-2026) – தென்னாடு முதல்வர் அவர்களின் தாயார் அமரர். சிவநேசரத்தினம் குணரத்தினம் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (29-04-2026) – சித்திரைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# சிவனடி சேர்ந்தார் சிவத்திரு. கந்தசாமி பரமலிங்கம் அவர்கள்



நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்மன் திருக்கோயில் அறங்காவலர் சபைத் தலைவரும், மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரியுமான சிவத்திரு கந்தசாமி பரமலிங்கம் அவர்கள், கடந்த 22.04.2026 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார். நயினை மண்ணின் ஆளுமையின் சிகரமாகவும், அறம் தவறா நிர்வாகியாகவும் திகழ்ந்த இவரது மறைவு ஈழத்துச் சைவத் தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பரம்பரை அறங்காவலர் பரமலிங்கம் கந்தசாமி நாகரத்தினம் தம்பதியினரின் புதல்வரான இவர், நயினை வரகவி நாகமணிப் புலவரின் பேரனும் ஆவார். ஓர் எழுதுவினைஞராகத் தனது அரச சேவையை ஆரம்பித்து, பின்னர் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று, வடக்கு கிழக்கு மாகாண சபையின் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுத் தலைவர், இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பல உயர் பதவிகளை வகித்து அரும்பணியாற்றியவர். குறிப்பாக, 1986 இல் நயினாதீவில் ஏற்பட்ட போர்ச் சூழலின்போது, தனது மதிநுட்பத்தால் ஊர் மக்களைப் பேரழிவிலிருந்து காத்தமை அவரது வரலாற்றில் ஒரு முக்கியப் பதிவாகும்.

ஓய்வுக்காலத்தில் தனது தந்தையார் விட்டுச்சென்ற திருக்கோயில் பணியைத் தொடர்ந்த அவர், நயினை நாகபூசணி அம்மன் திருக்கோயில் அறங்காவலர் சபைத் தலைவராகத் தனது இறுதிக் காலம் வரை மிக உன்னதமாகப் பணியாற்றினார். பல சமூக அமைப்புகளின் போசகராக இருந்து நல்வழிப்படுத்திய இவர், கொழும்பு நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து, ஊரின் உட்கட்டமைப்பு மற்றும் வீதிப் புனரமைப்புப் பணிகளில் பெரும் பங்காற்றினார்.

நீத்தாரின் உயிர் உய்வடைய வேண்டி எல்லாம்வல்ல நயினை நாகபூசணி அம்மையிடமும், ஐம்பூதநாதப் பெருமானிடமும் விண்ணப்பம் வைத்து வேண்டுகின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

# நல்லை ஆதீன இரண்டாம் குருமகாசந்நிதானம் அவர்களின் முதலாம் ஆண்டு குருபூசை விழா



ஈழத்துச் சைவத் தமிழ் உலகின் தலைமைப்பீடமான நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் முதலாம் ஆண்டு குருபூசை விழா, கடந்த 22.04.2026 (சித்திரைத் திருவாதிரை) புதன்கிழமை அன்று ஆதீன வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.1981 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை சுமார் 50 ஆண்டுகள் ஈழத்துச் சைவத்தின் காவலராகத் திகழ்ந்த சுவாமிகளின் நினைவைப் போற்றும் வகையில், காலை 8.30 மணியளவில் ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, சுவாமிகளின் திருவுருவச் சிலையினைத் துறைசார்ந்த பெருமக்கள் திறந்து வைத்தனர். நிகழ்வின் தொடக்கத்தில் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா வரவேற்புரை ஆற்றினார்.

ஆதீன அறக்கட்டளையின் செயலாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடமாகாண கௌரவ ஆளுநர் திரு. நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் தி. வேல்நம்பி அவர்கள், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாச பிள்ளை அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர். கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் சுவாமிகளின் தமிழ்ப்பணி குறித்துச் சிறப்புரையாற்றினார்.

ஆன்மீகப் பெரியோர்களான தவத்திரு வேலன் சுவாமிகள் (சிவகுரு ஆதீனம்), ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், சிவத்திரு வேதவியாசர் சுவாமிகள் மற்றும் சிவேந்திர சைத்தன்யர் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தனர். விழாவின் ஒரு முக்கிய அங்கமாகச் 'சிவபூமி' மற்றும் 'இந்துஒளி' சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

# காரைநகர் சைவ மகா சபை நூற்றாண்டு விழா

சுவாமி விபுலானந்தரால் பெயர் சூட்டப்பட்டதும், காந்தியடிகள் மற்றும் சேர் பொன் இராமநாதன் போன்றோர் திருவடி பதித்ததுமான பெருமைமிக்க காரைநகர் சைவ மகா சபையின் நூற்றாண்டு விழா, கடந்த 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை சபையின் மண்டபத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

சபைத் தலைவி வீ. புவனேசுவரி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்குத் சிவகுரு ஆதீன வேலன் சுவாமிகள் திருமுன்னிலை வகித்து ஆசியுரை வழங்கினர். வவுனியா தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் பிரதம விருந்தினராகவும், பிரதேச செயலர் செல்வி ந. ரஞ்சனா சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.




நிகழ்வின் முக்கிய அங்கமாக வரலாற்றுச் சிறப்புமிக்க நூற்றாண்டு மலர் வெளியிடப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பும் இடம்பெற்றன. காரைநகர் மண்ணின் சைவத் தமிழ் மரபைக் காத்து நிற்கும் இச்சபையின் நூற்றாண்டு நிறைவு விழாவில் பெருந்திரளான அடியார் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருச்சிற்றம்பலம்

# ஈழத்துச் சிதம்பரம் எனப்போற்றப்படும் காரைநகர் சிவன்கோயில் திருக்குடநன்னீராட்டுப் பெருவிழா



யாழ்ப்பாணம் காரைநகர் திண்ணபுரம் பகுதியில் அமையப் பெற்றுள்ளதும், **“ஈழத்துச் சிதம்பரம்”** என்று பத்தர்களால் போற்றப்படுவதுமான திருவருள்மிகு அழகம்மை (சௌந்தராம்பிகை) உடனுறை சொக்கநாதப் பெருமான் (சுந்தரேசுவரர்) திருக்கோயில் திருக்குடநன்னீராட்டுப் பெருவிழா எதிர்வரும் ஆனித் திங்கள் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

இத்திருக்கோயிலின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, திருக்குடநன்னீராட்டிற்கான தொடக்கக் கிரியைகள் எதிர்வரும் 29-06-2026 (ஆனி 15) திங்கட்கிழமை அன்று இறைபத்தியுடன் தொடங்கவுள்ளன. அதனைத் தொடர்ந்து, அடியார் பெருமக்கள் அனைவரும் கருவறைப் பெருமானை வணங்கி, எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு, 02-07-2026 (ஆனி 18) வியாழக்கிழமை காலை 10.00 மணி முதல் 04-07-2026 சனிக்கிழமை மதியம் 12.00 மணி வரை நடைபெறவுள்ளது.

விழாவின்தலை நிகழ்வான திருக்குடநன்னீராட்டு எதிர்வரும் 05-07-2026 (ஆனி 21) ஞாயிற்றுக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. குடநன்னீராட்டுப் பெருவிழாவைத் தொடர்ந்து, சொக்கநாதப் பெருமானுக்கும் அழகம்மைக்கும் 45 தினங்கள் தொடர்ச்சியாக மண்டல நீராட்டுப் பூசைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சிதம்பரத்தின் திருவருள் பெருகும் இப்புனித நன்னீராட்டுப் பெருவிழாவில், அடியார் பெருமக்கள் அனைவரும் கலந்துகொண்டு இறைவனது திருவருளைப் பெற்று உய்வீர்களாக.

திருச்சிற்றம்பலம்



# தருமபுர ஆதீன அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக்கான பயிற்சி மையத்தின் தொடக்க விழாவும் சுவாமிகளின் வருகையும்

**“சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்”** எனும் வாக்கிற்கு இணங்க சைவமக்களாக பல பிறவிகளிலே செய்த புண்ணியப் பேற்றின் காரணமாக இப்புவியிலே பிறந்துள்ளோம். அத்தகைய மானுடப் பிறவியினை எடுத்த நாம் **“இப்பிறவி எடுத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்”** என எமது மண்ணில் 19ம் நூற்றாண்டில் அந்நியராட்சியில் சிக்குண்டிருந்த எம்மவரை எம் சைவ அடையாளங்களைக் கட்டிக் காத்து சைவத்தின் காவலனாக எண்ணற்ற பணிகளை தன் உடல், பொருள், ஆவியை துச்சமெனக் கொண்டு இறைபணிக்கே அர்ப்பணித்த சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் பெருமானுடைய வழியிலே எம்மவர்கள் சைவ வாழ்வியலை வாழ்ந்து பிறவிப் பிணி அகன்று பேரின்ப வீடு தரவல்ல பெருமானின் பெருங்கருணைக்குப் பாத்திரமாக வேண்டும் என எல்லாம்வல்ல தில்லைக் கூத்தன்தன் திருவடிகளைப் போற்றி பணிந்து கொண்டு தமிழ் நாட்டிலே உள்ள பிரதானமான காலத்தால் முற்பட்ட ஆதீனங்களில் மிகவும் தொன்மையும், அதி சிறப்பும் வாய்ந்த ஆதீனமாக திகழ்ந்து வரும் தருமை ஆதீனத்தின் பணிகள் அளவிடற்கரியன.

அந்த வகையிலே 1933 இல் தருமை ஆதீன 23 ஆவது குருமகா சந்நிதானம் அவர்களின் பத்தாம் ஆட்சியில் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சைவசித்தாந்தக் கல்வியானது குருகுல முறையில் மயிலாடுதுறை மகாதானத் தெருவில் 57 ஆம் எண்ணுள்ள கட்டிடம் பெற்று அங்கு சுவாமிநாத பண்டிதரை ஆசிரியராக வைத்துச் சித்தாந்த வகுப்பைத் தொடக்கி அருளினார்கள். இக் கல்வியானது 24 ஆவது குருமகா சந்நிதானத்தின் காலத்தில் மலராக மலர்ந்தது. பின்னர் 25 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் 03.07.1987 அன்று மயிலாடுதுறையில் சீர்வளர்சீர் கயிலைக் குருமணி பொற்திருமஞ்சனம் (கனகாபிஷேகம்) நினைவு அறக்கட்டளையின் சார்பில் சைவசித்தாந்த மாலை நேரக் கல்லூரியாக தொடக்கித் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

2020 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு அன்று எமது 27வது குருமணிகள் சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாணையின் வண்ணம் மிகவும் சீரோடும் நடைபெறுகின்றன.



**சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார், தருமபுர அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இலங்கை ஒருங்கிணைப்பாளர்.**

தமிழகத்தின் பல மையங்களிலும் ஆங்காங்கே சிறப்பாக இச் சைவசித்தாந்தக் கல்வியானது நடைபெறும் அதே சமயம் வெளிநாடுகளிலும் இக் கற்கை நெறியினை விரிவுபடுத்தி உள்ளார்கள் அதன் அடிப்படையிலேயே குருவருளாலும் திருவருளாலும் யாம் 2022/23 ஆம் VII ஆம் அணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் சைவசித்தாந்த முதுமாணிக் கற்கையினை பயில்கின்ற பேறு பெற்றோம். எமக்கு இணைப்பாளராக இருந்த கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் ஐயா அவர்கள் எமக்கு ஏற்படுத்தித்தந்த பேறாகக் கிடைத்த ஆசான் லொயலாக் கல்லூரியின் ஓய்வுநிலைப் பேராசிரியர். சித்தாந்த சரபம் அருணை பாலறாவாயன் ஐயா அவர்கள் எமக்கு விரிவுரையாளராகக் கிடைத்தார். ஐயா அவர்களிடம் கற்ற நிறைவில் தருமபுர ஆதீனத்தால் நடாத்தப்படுகின்ற சைவசித்தாந்த கலாநிதி, சைவசித்தாந்தப் புலவர் பட்டப்படிப்புகளை எமது நாட்டிலும் ஆரம்பித்து வைக்க வேண்டும் என அடியேன் விண்ணப்பம் வைத்தமைக்கு அமைவாக எமது குருநாதர் மூன்று ஆண்டுகளின் பின் 2026.01.09 ஆம் திகதி அதற்கான அனுமதிக் கடிதம் அனுப்பி வைத்தார்கள்.

குருவருளால் பட்டப்படிப்பினை ஆரம்பிப்பதற்கான தொடக்க வேலைகளை ஆரம்பித்ததோடு, இக் கற்கை நெறியை ஆறுமுகநாவலர் பெருமானால் உருவாக்கப் பெற்ற அவரின் கனவு மெய்ப்பட தம்பணி ஆற்றி வரும் இல. 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் உள்ள சைவபரிபாலனசபையில் நடாத்துவதற்கு இன்றைய தலைவராக இருக்கக் கூடிய சிவத்திரு. உ. தயானந்தன் ஐயா, செயலாளர் சிவத்திரு. சே. செல்வராஜன் ஐயா ஆகியோரிடம் இது தொடர்பாக கலந்தாலோசித்து அவர்களது நிர்வாகக் கூட்டத் தீர்மானத்தின்படி இடம், ஆட்பல வளங்களின் உதவிகளை தாம் வழங்கமுடியும் என ஒப்புதல் அளித்தனர். இதன்படி தொடக்கவிழாவானது தருமை ஆதீன சைவசித்தாந்தப் பட்டப்படிப்புகள் ஒருங்கிணைப்பாளர் சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் அவர்களினால் அனைத்து ஏற்பாடுகளும் அவர்தம் கணவர் சிவத்திரு. பரமலிங்கம் ராஜ்குமாரின் முழுமையான நிதிப்பங்களிப்போடு, 2026.04.05 ஆம் திகதி மிகவும் சிறப்பான முறையில் நிகழ்வுகள் அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றது.

இந் நிகழ்விற்காக தருமை ஆதீனத்தின் 27ஆவது நட்சத்திர குருமணிகள் சீர்வளர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சித்தாந்த சரபம் அருணை பாலறாவாயன் அவர்கள், சீர்வளர்சீர் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள், சிவத்திரு. மறைஞானசம்பந்தம் வெற்றிவேல் ஐயா, சிவத்திரு. சம்பந்தம் ஆகாஷ் ஐயா ஆகியோர் சுவாமிகளுடன் யாழ் காங்கேசன்துறை சர்வதேச விமானநிலையமூடாக சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார், சைவபரிபாலனசபைத் தலைவர் சிவத்திரு. உ. தயானந்தன் ஆகியோர் தலைமையில் கலாநிதி ஆறு திருமுருகன், கலாநிதி கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஏனைய சிவனடியார்கள் சூழ வரவேற்கப்பட்டு சிவபூமி திருக்குறள் வளாகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றும், சிங்கள மொழிமூல திருமுறை நூல் ஒன்றும் சுவாமிகளின் கரங்களால் வழங்கப்பட்டன.

சைவசித்தாந்தக் கல்வியை புகட்டுகின்ற பாரிய பணியை பொறுப்பேற்கும் தாங்கள் இலக்கிய நூல்களாக எமது நால்வர் பெருமக்களால் அருளிச் செய்யப்பட்ட திருமுறைப் பயிற்சிகளை வழங்கும் ஆசிரியர்கள், மாணவர்களையும் நன்முறையில் வழிநடத்தி ஒற்றுமையும், சிவத்துவத்தையும் பேணிக்காக்க வேண்டும் என சுவாமிகள், ஒருங்கிணைப்பாளரிடம் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

தொடக்க விழாவானது பி.ப. 2.30 மணிக்கு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது. திருமுறை ஓதுவார்கள் திருமுறைகளை இசைக்க, வேதபாராயண விற்பன்னர்களாக சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்களை ஓத, அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நந்திக் கொடிகளையும், நிறைகும்பங்களையும் தம் கரங்களிலே தாங்கிவர சுவாமிகள் பூரண மரியாதையுடன் மங்கலவாத்தியம் சகிதம் அழைத்துக் கொண்டு கடையிற்சுவாமிகள் சிவாலயத்திற்குச் சென்று வழிபாடாற்றி ஊர்வலமானது சைவபரிபாலன சபை **"நாவலர் ஆச்சிரம மண்டபத்தை"** அடைந்தது.

சைவபரிபாலன சபை வளாத்தில் ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவச் சிலைக்கு தருமை ஆதீனக் குருமணிகள் சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகளே மலர்மாலை அணிவித்து, தேங்காய் உடைத்து, தீபம் காட்டி மலர் சொரிந்து வழிபாடாற்றியதுடன் நந்திக் கொடி ஏற்றப்பட்டு சுவாமிகள் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து நாவலர் ஆச்சிரம மண்டபத்தினுள் எழுந்தருளி அருள்பாலிக்கும் நடராசப் பெருமானுக்கும், நால்வர் பெருமக்கள், சந்தானாசிரியர்களிற்கும் வழிபாடு நடைபெற்று, குருமணிகளிற்கு பாத பூசை இடம் பெற்று அதனைத் தொடர்ந்து இறைவணக்கம் மங்கல விளக்கேற்றல் வரவேற்பு நடனம் என்பன இடம் பெற்றது. நிகழ்வின் வரவேற்புரையினை மூத்த விரிவுரையாளர் கலாநிதி இ. ஜெயந்திரன் அவர்களும், ஆசியுரைகளை தவத்திரு. வேலன் சுவாமிகள், தவத்திரு. சீர் வேதவித்தியாசாகர சுவாமிகள் வழங்கினார். வாழ்த்துரைகளை கலாநிதி ஆறு திருமுருகன், கலாநிதி கு.வை.க.வைதீஸ்வரக் குருக்கள், மேனாள் துணைவேந்தர் சிறிசற்குணராஜா, இந்துக் கற்கைகள் பீடாதிபதி பெரும்சீர் (பிரம்மஸ்ரீ) பத்மநாதக் குருக்கள், மேனாள் இந்துசாதன பத்திரிகை ஆசிரியர் சிவசீர் மயூரகிரிக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வின் சிறப்புக் கருத்துரைஞராக சித்தாந்தசரபம், இயக்குநர் அருணை பாலறாவயன் அவர்களும், சைவசித்தாந்த துறைத் தலைவர் கலாநிதி தி. செல்வமனோகரன் அவர்களும் நிகழ்த்தியதுடன் சிறப்பு இசை நிகழ்வாக செல்வன். ராஜ்குமார் சிவராஜ், யா / கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனின் வாய்ப்பாட்டிசையினைத் தொடர்ந்து

**(16ஆம் பக்கம் பார்க்க)**

# தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள்

# தென்னாட்டில் எழுந்தருளல்



தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கையிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், கடந்த 06.04.2026 அன்று யாழ்ப்பாணம், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருளாசி வழங்கியிருந்தார்கள்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையில் நடைபெற்ற 'சைவசித்தாந்த கலாநிதி' மற்றும் 'சைவசித்தாந்தப் புலவர்' பட்டப்படிப்புக் கற்கைநெறிகளின் தொடக்க விழாவிற்காக இலங்கை வருகை தந்திருந்த குருமகா சந்நிதானம் அவர்கள், தருமபுரம் திரும்புவதற்கு முன்னதாகத் தென்னாடு சிவமடத்திற்கு வருகை தந்து சிறப்பித்தார்கள். இதன்போது, சிவமடத்தின் மூலவரான ஐம்பூதநாதரிடத்தில் விசேட வழிபாடுகளை ஆற்றிய சுவாமிகள், மடத்தின் வளாகத்தில் அமைந்துள்ள கோசாலை, மயில் வளாகம் மற்றும் நூலகம் என்பவற்றையும் பார்வையிட்டார்கள். குறிப்பாக தென்னாட்டில் திருமுறைச் சன்னிதியில் வைத்து, வழிபடப் பெற்று வருகின்ற, தருமை ஆதீனத்தினால் வெளியிடப்பட்ட திருமுறைகளையும் சுவாமிகள் பார்வையிட்டு, தீபம் காட்டி வழிபாடும் ஆற்றியிருந்தார்கள். தொடர்ந்து கலந்துகொண்ட அடியார் பெருமக்களுக்கு சுவாமிகள் அருளாசிகளையும் வழங்கியிருந்தார்.

குருமகா சந்நிதானத்துடன் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள், தருமையாதீனத் தம்பிரான் சீர்வளர்சீர் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள், அகில இலங்கை இந்துக் குருமார் சங்கத் தலைவர் 'சிவாகம கலாநிதி' சிவத்திரு. கு. வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள், தருமையாதீனப் புலவர் சித்தாந்த சரபம் அருணை வடிவேல் பாலறாவாயன் ஐயா அவர்கள் மற்றும் தருமபுர அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இலங்கை ஒருங்கிணைப்பாளர் சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

குருமகா சந்நிதானத்தின் இந்தச் சிறப்பு வருகையை எமது வேண்டுகோளுக்கிணங்க, மிகுந்த முனைப்புடன் ஒழுங்கமைத்துத் தந்த ஒருங்கிணைப்பாளர் சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் அவர்களுக்கு எமது நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கின்றோம். அவர்கள் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக வாழத் தென்னாடு ஐம்பூதநாதர் துணைநின்று அருள்வாராக.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

# தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகா சந்நிதானம் அவர்களின்
# யாழ்ப்பாணத் திருத்தலப் பயணங்கள்






















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



## அப்பர் பெருமானைப் பற்றுவோம்!

எதிர்வரும் சித்திரைச் சதய விண்மீனில் அப்பர் பெருமான் குருபூசை வருகின்றது. இன்றைய சமுகத்த வர் அனைவரும் அப்பர் பெருமானின் வாழ்வை முன்னுதாரணமாகக் கொள்வதே தலையாயது!

அப்பர் பெருமான் தம் வாழ்க்கையில் எண்ணற்ற சோதனைகளை எதிர்கொண்டார். உடல் வலி, சமய அழுத்தம், அரசியல் எதிர்ப்பு ஆகியவற்றைத் தாண்டியும் அவர் சிவபெருமானை இறுக பற்றினார். இன்று நாமும் வேறு வேறு வடிவில் இதே சோதனைகளை எதிர் கொள்கிறோம். பொருளாதார சிக்கல்கள், மனஅழுத்தம், வாழ்க்கைத் தடைகள் போன்றவை எம்மை அலைக் கழிக்கின்றன. இந்நிலையில், துன்பத்தை தாங்கி நம்பிக்கையை நிலைநிறுத்திய அப்பர் வாழ்க்கை தான் நமக்கு மனவலிமையை அளிக்கிறது.

அவரது வாழ்க்கையில் மிக முக்கியமாக விளங்குவது தாழ்மை. உயர்ந்த ஞானம் பெற்றிருந்த போதிலும் “அடியேன்” என்ற பணிவை அவர் கடைபிடித்தார். இன்றைய சமூகத்தில் அறிவும் செல்வமும் உயர்ந்தாலும், மனித உறவுகள் சீர்குலைவதற்குக் காரணம் அகந்தையே ஆகும். பணிவு மட்டுமே உறவுகளை நிலைநிறுத்தும் என்பதை அப்பர் வாழ்வு எடுத்துக்காட்டுகிறது.

அப்பர் பெருமான் பத்தியைச் செயலில் வெளிப் படுத்தியவர். கோயில்களைச் சுத்தம் செய்தல், உழவாரப் பணியை இறைபணியாகக் கருதுதல் போன்ற செயல்கள், “பணியுமாம் என்றும் பெருமை” என்ற உயர்ந்த கருத்தை வெளிப்படுத்துகின்றன. இன்று சமூகத்தில் சுயநலம் மேலோங்கிக் கொண்டிருக்கிறது! பொதுநலச் செயல்களில் ஈடுபாடு குறைந்து வருகிறது! இந்நிலையில், அப்பர் காட்டிய சேவை மனப்பான்மை சமூக ஒற்றுமையை உருவாக்கும் முக்கியமான வழியாகும்.

தேவாரப் பாடல்கள் மூலம் அப்பர் ஆன்மீக விழிப்புணர்வையும் தமிழ் பண்பாட்டையும் பரப்பினார். இன்று உலகமயமாக்கலின் தாக்கத்தில் இளைஞர்கள் வளர்கின்றனர். இது முன்னேற்றத்திற்கு உதவினாலும், பாரம்பரிய அடையாளங்கள் மங்குவதற்கான அபாயமும் உள்ளது. எனவே, ஆன்மீகக் கல்வி மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வு இன்றைய தலைமுறைக்கு அவசியமாகிறது.

அப்பர் பெருமான் உண்மைக்காகத் துன்பத்தையும் ஏற்றுக்கொண்டார். சலுகைக்காகக் கொள்கைகளை மாற்றாத உறுதியை அவர் காட்டினார். தனக்கென வாழாது சைவ உலகுக்கென வாழ்ந்தார். பதவிகளைத் துறந்து மெய் வழியின்பால் நின்றார். உண்மை வழி நிற்பவர்கள் தம்மைத் தாமே தாழ்த்தினாலும் காலம் அவர்களை உயர்த்தும் என்பதை அப்பர் வாழ்வு வலியுறுத்துகிறது.

எனவே, அப்பர் குருபூசை நாள் ஒரு சடங்காக மட்டும் இல்லாமல், நம் வாழ்க்கையை திருத்திக் கொள்ளும் வாய்ப்பாக அமைய வேண்டும். நம்பிக்கை, தாழ்மை, சேவை, உண்மை ஆகிய அடிப்படைப் பண்புகளை மீண்டும் நிலை நிறுத்தினாலே நமது சமூகம் நல்ல திசையில் நகரும். அப்பர் பெருமான் காட்டிய பாதை, இன்றும் நாளையும் வழிநடத்தும் சைவ உலகின் ஒளியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல!

**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராண விளக்க உரை



**பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.**

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**37,38. "பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்ற இடத்திலே**

**பொய்யாயின:-** நிலையற்றன.

சைவசித்தாந்தம் தெளிவாகச் சொல்லும். இந்த உலகப்பொருள்கள் எல்லாம் பொய்ப் பொருள்கள். எந்த ஒரு பொருள் நிலைத்து நிற்கும் தன்மையுடையதோ அதுவே மெய்ப்பொருள். எனவே உலகும், உடலும் அவை அவ்வப்போது மேற்கொள்ளும் நினைவும், செயலும், சொல்லும் ஆகிய அனைத்தும் பொய்ப் பொருள்களே.

**"பொய்யா யினவெல்லாம் போயகல"** என்னும் இடத்தில், போயகல என்பது போய்த்தொலைய எனும் ஒருவகைச் சொல்வழக்கு.

**வந்து:-** எளிவந்த கருணையால் தாமே வலியவந்து என அவன் கருணைத்திறம் காட்டியது.

**போய் அகல என்பதில் போய்:-** நீங்குதல் அகல:- மீண்டும் வராத நிலையும் என்று வலியுறுத்துவார்.

எனவே பொய்யான இந்த பொருள்கள் எல்லாம் நம்மை விட்டு நீங்கி, மீண்டும், அது நம்மை சாராத வண்ணம் பெருமான் அருள் செய்கிறான். இதை உணர்த்த, **"பொய்காட்டி பொய் அகற்றி"** என்று உண்மை விளக்கம் சாத்திரம் சொல்கிறது.

அவன் கருணைத்திறம் காட்டி என்பதை **"வந்து அருளி"** என்றார்.

**அருளி:-** என்னுடைய பொல்லாக் குணங்களைப் போக்கிச் சிவஞானம் அருளி.

**பொய் இன்னனவென்பதை**
**எங்குஞ் சிவமொழிய இல்லையவன் தன்னாணை**
**அங்கந் திரள்கருவி யாணவாம் - பொங்குமிருள்**
**மைசெய்த மாமாயை மாயைவினை மற்றுமெல்லாம்**
**பொய்பொய் எனவே புகல் - எனவரும் சிவாநந்தமாலை கொண்டு அறிக.**

**39. "மெய்ஞ்ஞானமாகி மிளர்கின்ற மெய்ச்சுடரே"**

மெஞ்ஞானம்:- உணர்வரிய மெய்ஞ்ஞானம் (பெரியபுராணம்). சூரியனொளி தன்னையும் விளக்குவதாய்ப் பொருளையும் புலப்படுத்தும். அது போலன்றி, மெய்ஞ் ஞானம் தன்பயனாகிய பேரின்பவிளை வைக் கொண்டு அறியப்படுவதன்றித் தான் நேரே அறியப்படாமையின் உணர்வரிய ஞானமாய் இறைவன் விளங்குகின்றான் என்பது. மீட்டும் மெய்ச்சுடர் என்பதற்கும் இதுவே கருத்தாதல் கண்டு கொள்க.

**"மெய்ஞ்ஞானமாகிமிளர்கின்றமெய்ச் சுடரே"** என்று சொல்லுகின்ற இடத்து, மின்னுதல் விளக்கு வந்து ஒளிவிடும் காலத்து இருள் நீங்குதல் போல, என்பார் அருணையார். நீ வந்து விளங்கிய காலத்து அஞ்ஞானம் அகன்றது என்றவாறு. **"ஏனைய விளக்குகள் போல அணையும் விளக்கு அல்ல"** என்பார். **"மெய்ச்சுடரே"** என்று சொன்னார். இவ்வுலகத்தில் உள்ள விளக்குகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு **"என்றும் அணையாச் சுடர்"** என்றார்.

**"நொந்தா ஒண்சுடரே"** என்று சுந்தரர் சொல்வது போல இறைவனை **"மெய்ச்சுடரே"** என்று கூறினார்.

**40. "எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே" என்ற இடத்திலே,**

எஞ்ஞானம் என்றதில் எகரவினா, எஞ்சாமைப் பொருட்டு, எஞ்ஞானமும் என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று.

பெருமானே நீ வந்து உதவும் காலத்தும் எந்த ஞானமும் அடையாமல் இருக்கின்றேனே என்று தன்னுடைய நிலைப்பாட்டை சொல்லும் விதமாக **"எஞ்ஞானம் இல்லாதேன்"** என்று சொல்கிறார். பெருமானைச் சொல்லும் போது இன்பப்பெருமானே என்கிறார். இன்பமே வடிவானவன் என்று அவனுடைய குணத்தைச் சொல்லி,எந்த ஞானமும் இல்லாத எனக்கு அருளுகின்ற அவனுடைய. கருணையைச் சொல்லுகின்ற விதமாக **"எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே"** என்று அருளினார்.

நீ செய்கின்ற செயல்கள் எல்லாம் எங்களுடைய ஞானத்திற்கு எதிராக இருக்கின்ற அஞ்ஞானத்தை அகல்விக்கும் நல்அறிவே என்று சொல்கிறார். அஞ்ஞானத்தை நீக்குபவன் என்று நேரடியாக சொல்லாமல், அஞ்ஞானத்தை அகல்விக்கும் என்று சொல்லும் போது, அஞ்ஞானத்தை

முறைமுறையாக நிதானமாகச் செய்கின்றான் என்பது அவருடைய கருணைத் திறத்தை குறிக்கிறது.

"பையவே கொடுபோந்து பாசம் எனும் தாள் உருவி" என்று அச்சோப் பதிகத்தில் சொல்கிறார். பாசம் எனும் அஞ்ஞானத்தை நம்மிடம் இருந்து நீங்குபவன். அதை எப்படிச் செய்கிறான் என்றால், ரொம்ப நிதானமாக, எந்த வகையிலும் நமக்கு ஓர் சிரமம் இல்லாமல் அதை செய்கிறான். இது அவனுடைய கருணை. இன்பமே வடிவான பெருமான் இந்த உயிர்களும் இன்புற்ற இருக்க வேண்டும் என்று கருணையால் செய்கின்ற செயல்.

**"பாச வேர் அறுக்கும் பழம்பொருள்"** என்று பிடித்த பத்தில் சொல்கிறார்.

**"பாசமான களைவார்"** என்பார் திருஞான சம்பந்த பெருமான்.

எனவே இப்பேர்ப்பட்ட பெருமான், எஞ்ஞானமும் இல்லாத எனக்கு இன்பமே வடிவினனாக இருக்கிறான். நீ பேரறிவு உடைவன். எங்களுடைய அறிவு சிற்றறிவு. இந்த சிற்றறிவை உணர்த்துகின்றவன் நீ. அறிவிக்க அறியும் நிலையில் உள்ள இந்த ஆன்மாவிற்கு, தாமே அறிகின்ற தன்மையிலும், முற்றும் அறிகின்ற தன்மையிலும் இருக்கின்ற பேரறிவு உடைய பொருளே எங்களை வழிநடத்தும் பொருள். அதனால் நாங்கள் இன்புறுகிறோம் என்று சொல்லி **"எஞ்ஞான மில்லாதேன் இன்பப்பெருமானே**

**அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"** என்று அருளினார்.

**41,42. ஆக்கம், அளவு, இறுதி இல்லாய்! அனைத்துலகும் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,**

**ஆக்கம் - தோற்றம் (தொழிற்பெயர்)**

**இறுதி - அழிவு**

ஆக்கம், இறுதி, அளவு, இல்லாய் என்று கொண்டு கூட்டு செய்யவும். ஆக்கம் ஆகிய படைப்பு எதற்கு என்றால் உயிர்கள் வினைகளை நுகர்ந்து ஆணவ மலத்தின் வலிமை குன்றி முத்தி இன்பம் பெறுதற்குரிய பரிபாகம் எய்துவதற்காக படைப்பு செய்யப்படுகிறது. அதாவது தனுகரண புவன போகங்களோடு கூட்டுதல்.

**அளவு** - காத்தல் காத்தலாவது உயிர்களை தத்தம் கால எல்லை வரை உடல் முதலியவற்றோடு இருத்தி வினைகளை நுகரச்செய்தல். ஆக்கப்பட்ட ஒன்று அழிவு எய்துகிற வரையில் நுகரும் இன்ப துன்பங்களின் கால அளவு. எனவே காத்தலை அளவு என்று குறிப்பிட்டார். **'அளவு'** என்னும் தொழில் பெயர் ஆகுபெயர் ஆகி காத்தலை உணர்த்திற்று.

இங்ஙனமன்றி ஆக்கமும் கேடும் ஆகிய முதல் இறுதிகளைக் கொண்டு அழைக்கப்படுதலின் "அளவு" என்றார். காக்கப்பட்ட கால அளவையின் தொடக்கமே ஆக்கமும், அதன் முடிவு எல்லையே, ஒடுக்கமும். ஆதலால் காத்தலுக்கு **"அளவு"** என பெயரிட்டனர் என்பாரும் உளர் என்பது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் உரை .

ஆக்கம் முதலியவற்றிற்கு காரணமாய் இருக்கின்ற முதல்வன் தனக்கு அவை இல்லாதவன் என்பதை விளக்க "ஆக்கம், அளவு, இறுதி இல்லாய்" என்றார். ஆக்கம், அளவு, இறுதி நாம் பார்த்துக் கொண்டு உள்ளோம். போக்கும் வரவும் உயிர்களுக்கு உண்டு. இதைத்தான் மெய் கண்டார் இரண்டாம் நூற்பாவில்,

**"இருவினையின் போக்குவரவு புரிய**
**ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே"**

என்று அருளினார். உயிரின் போக்கு, வரவுக்கு காரணம் வினைகள். ஆனால் போக்குவரவு இல்லாதவன் இறைவன். இதனையே

**"போக்கும் வரவும் புணர்வும் இல்லா புண்ணியன்"** என்று 77 வது வரியில் சொல்லுகிறார் மணிவாசகர்.

பெருமான் அநாதி, நித்திய பொருள். எனவே ஆக்கம், அளவு , இறுதி இல்லாத பொருள்.

ஆனால் அனைத்து உலகமும் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய் என்றார் அடுத்த வரியில். தனக்கு என்று ஒரு படைத்தலையும், நிலைபெற்று இருத்தலையும், சங்காரமும் இல்லாத பெருமான் அனைத்து உலகத்தையும் அதாவது நாம் வாழும் உலகம் மட்டுமல்லாது பாதாள உலகம் ஏழும் விண்ணுலகம் பலவற்றையும் ஆக்கி காத்து அழிப்பவன் ஆக உள்ளார். இதைத்தான் மாணிக்கவாசகர் திரு அண்டப் பகுதியில்

**"நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன!"** என்று அருளிச் செய்தார்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### திருவொற்றியூரில் நிகழ்ந்த அடியார் பெருங்கடல் வரவேற்பு

சுந்தரர் திருக்காளத்தியிலிருந்து புறப்பட்டுத் திருவொற்றியூர் தலத்தினைச் சென்றடைகின்றார். ஆதிபுரி இறைவரின் அடியார்கள், நம்பிகள் வருகையை அறிந்து அகமகிழ்ந்து, வீதிகளெங்கும் வாழை, கமுகு மற்றும் தோரணங்களால் அலங்கரித்து, நிறைகுடங்கள் மற்றும் தூப தீபங்களோடு அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்:

**அண்ணல் தொடர்ந்தாவணம் காட்டி ஆண்ட நம்பி எழுந்தருள
எண்ணில் பெருமை ஆதிபுரி இறைவரடியார் எதிர்கொள்வார்
வண்ண வீதி வாயில்தொறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப தீபமெடுத்துத் தொழஎழுங்கால்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 200)**


மங்கள வாத்தியங்கள் முழங்க, ஆடலரங்குகளில் சிவச்செல்வியர் நடனமிட, விண்ணவர் மலர்மழை தூவ, அடியார் குழாத்துடன் வன்தொண்டர் இனிது எழுந்தருளினார்.

**வரமங்கல நல்லியம் முழங்க வாச மாலை அணியரங்கில்
புர மங்கையர்கள் நடமாடப் பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங்கையரும் அமரர்களும் வீச அன்பருடன்புகுந்தார்
பிரமன் தலையிற் பலியுகந்த பிரானார் விரும்பு பெரும் தொண்டர்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 201)**

ஒற்றியூர் திருத்தொண்டர்கள் கடல்போல் திரண்டு வந்து, சுந்தரரைத் தங்கள் சுற்றத்தினர் போலச் சூழ்ந்து அன்பு பாராட்டித் துதித்தனர். அடியார்க்கு அடியாரான நம்பிகளும் அவர்களை எதிர்வணங்கித் திருக்கோயில் வாயிலை அடைந்தார்.

**ஒற்றியூரில் உமையோடும் கூட நின்றார் உயர்தவத்தின்
பற்று மிக்க திருத்தொண்டர் பரந்த கடல்போல் வந்தீண்டிச்
சுற்றம் அணைந்து துதிசெய்யத் தொழுது தம்பிரான் அன்பர்
கொற்ற மழவேறுடையவர்தம் கோயில் வாயில் எய்தினார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 202)**

உட்புகுந்த சுந்தரர், ஒற்றியூருறைப் பரம்பொருளின் திருமுன்பு ஊனும் உயிரும் உருக வீழ்ந்து பணிந்து, **'பாட்டும் பாடி'** எனும் திருப்பதிகத்தினால் போற்றினார்.




**பாட்டும் பாடிப் பரவித் திரிவார்**
**ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்**
**காட்டும் கலமும் திமிலும் கரைக்கே**
**ஓட்டும் திரைவாய் ஒற்றியூரே**
**- (சுந்தரர் தேவாரம்: திருவொற்றியூர் - திருப்பாடல் 1)**

இவ்வாறு, திருவொற்றியூரில் ஆலமுண்ட அண்ணலைத் தனது ஆழமான பத்தியால் முப்போதும் போற்றித் துதித்து அங்கேயே சில காலம் தங்கியிருந்தார்.

### திருவொற்றியூரில் சங்கிலியாரின் திருஅவதாரம்

திருக்கயிலை மலையில் முன்னர் அநிந்திதை எனும் திருநாமத்தோடு எம்பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்து வந்த சிவஞானச் செல்வியார், ஆலாலமுண்ட அண்ணலின் திருவருள் ஏவலால் இப்பூவுலகில் அவதரித்தார். திருவொற்றியூரிலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவிலுள்ள திருஞாயிறு எனும் சிற்றூரில், வேளாளர் மரபினரான ஞாயிறுகிழார் எனும் கொள்கைச் சிறப்புடைப் பெரியோருக்குப் புதல்வியாகத் தோன்றி, '**சங்கிலியார்**' எனும் திருப்பெயரில் இனிது வளர்ந்து வந்தார். இத்திருஅவதாரத்தைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு போற்றுகின்றார்:

**நாலாம் குலத்தில் பெருகு நலமுடையார் வாழும் ஞாயிற்றின்**
**மேலாம் கொள்கை வேளாண்மை மிக்க திருஞாயிறு கிழவர்**
**பால்ஆதரவு தருமகளார் ஆகிப் பார்மேல் அவதரித்தார்**
**ஆலாலம்சேர் கறைமிடற்றார் அருளால் முன்னை அநிந்திதையார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 207)**

திருக்கயிலையில் பன்னெடுங்காலம் உமையம்மைக்கு அணுக்கத் தொண்டு புரிந்திருந்த தன்மையினால், சிறு பிராயம் முதலே சங்கிலியாருக்கு அம்பிகையின் திருவடிகளில் மாறாத அன்பும் ஈடுபாடும் இயல்பாகவே தோன்றியது. தமது முந்தைய கயிலை வாழ்வின் நிலையினைத் திருவருள் முன்னின்று உணர்த்த, தாமே உணரப் பெறும் அதீதப் பக்குவத்தோடு அவர் விளங்கினார். அலை போன்ற கண்களை உடைய தோழியர்களோடு விளையாடும் பருவங்கள் தோறும், உலகியல் இன்பங்களில் ஈடுபடாது சிவபத்தியே மேலோங்கி நிற்க அவர் வளர்ந்து வந்தார்.

**மலையான் மடந்தை மலர்ப்பாதம் மறவா அன்பால் வந்தநெறி**
**தலையாம் உணர்வு வந்தணையத் தாமேஅறிந்த சங்கிலியார்**
**அலையார் வேற்கண் சிறுமகளிர் ஆயத்தோடும் விளையாட்டு நி**
**லையாயின அப்பருவங்கள் தோறும் நிகழ நிரம்புவார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 208)**

இவ்வாறு தெய்விகத் தன்மையுடன் வளர்ந்த சங்கிலியார், திருமண வாழ்வை மறுத்துத் திருவொற்றியூர் கன்னி மாடத்தில் தங்கிச் சிவப்பணி புரிந்து வரத் தொடங்கினார். அங்குதான் ஆரூரரைச் சந்திக்கும் அந்தப் பெரும் சிவஞானத் தருணம் இறைவனால் நிகழ்த்தப்பட இருந்தது. இவ்வாறாகத் தனது அவதாரப் பயனை நோக்கிச் சங்கிலியார் பேரன்போடு வளர்ந்து வந்த காட்சியைச் சேக்கிழார் அழகுற விளக்குகின்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரலாற்றுத் தொடர்புடைய “பஞ்சலிங்கேச்சரம்” எனும் பனங்காமம் சிவன் கோயில்



ஈழத்தின் வடக்கில் புகழ்பூத்த சிவன் கோயில்களுள் பனங்காமத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலும் ஒன்று. வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சிவாலயமாகவும் அதிக தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் ஆலயமாகவும் மிளிர்கின்றது.

### திருக்கோயில் அமைவிடம்

பனங்காமம் சிவன் கோயில் மாந்தை கிழக்கில் மல்லாவி பிரதேச சபைக்குட்பட்ட மூன்று முறிப்பில் உள்ள நட்டாங்கண்டிற்கு தெற்கே 2 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.



### திருத்தலவூர் சிறப்புகள்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இப்பிரதேசத்தில் பனங்காமம் என்ற ஊர் தோற்றம் பெற்றமைக்கு பல கதைகள் கூறப்பட்டாலும் வரலாற்று ஆவணக் குறிப்பின்படி, 1870 இல் இவ்விடத்தில் அரசாட்சி செய்த நல்லமாப்பாணன். ஒல்லாந்தரால் சிறைப் பிடிக்கப்பட்டு, கொழும்புச் சிறையில் அடைக்கப்பட்டபோது அவர்மனைவியானநல்லைநாச்சியார்வண்ணார்பண்ணைக்கு வந்து வைத்திலிங்க செட்டியாரிடம் அடைக்கலம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அப்பொழுது வைத்திலிங்க செட்டியார் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி நல்லமாப்பாணனை விடுவித்ததாகவும் அதற்கு நன்றிக்கடனாகச் செட்டியார் கட்டிய ஆலயத்திற்கு 20,000 பனை மரங்களையும் துணுக்காயில் உள்ள தேராங்கண்டல் கிராமத்தையும் நல்லமாப்பாணன் வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் அன்று தொட்டு இப்பிரதேசம் பனைமர வளத்தால் செழித்தோங்கியிருந்தமையால் பனங்காமம் என்ற பெயரைப் பெற்றதாகப் பலர் கூறுவர்.

தற்போது புதுப்பொலிவுடன் விளங்கும் இத் திருக்கோயில் முன்னொரு காலத்தில் அடர்ந்த வனப்பகுதியாக இருந்துள்ளது. இப்பொழுது அமைந்துள்ள கோயிலின் அருகாமையில் பண்டைய கோயில்களின் கட்டட அழிபாட்டு உதிரிப்பாகங்கள் ஆங் காங்கு சிதருண்டு கிடக்கின்றன. இப்பழங் கோயிலில் இருந்த புராதன சிவலிங்கங்களே தற்போதைய திருக்கோயிலில் நிலைநிறுத்தி பூசிக்கப்பட்டும் வருகின்றது. இவ்வாறு தென்படும் தொல்லியல் சான்றுகள் பனங்காமம் எனும் ஊறிற்குத் தொன்மையான தொடர்ச்சியான வரலாறுண்டு

என்பதனை உறுதி செய்கின்றது.

## திருக்கோயில் வரலாற்றுச் சிறப்பு

வன்னி நிலப்பரப்பில் அமைந்துள்ள பல சைவக்கோயில்களின் தொன்மைகளை நோக்கும் போது அவற்றிற்குத் தொன்மையான தொடர்ச்சியான வரலாறுகள் இருப்பதாக பல வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் வன்னிப் பகுதிகளில் ஆராய்ச்சி செய்த பிரித்தானிய தொல்லியல் ஆய்வாளர்கள் பல கோயில்களையும் அங்கே கிடைத்த தொல்பொருட் சின்னங்களையும் ஆவணப்படுத்தியுள்ளனர். அத்தகைய ஆலயங்களுள் பனங்காமம் சிவன் கோயிலும் ஒன்றாகும். 'நெவில்' என்ற பிரித்தானியர் இத்திருக்கோயில் பற்றி பின்வருமாறு குறிப்புரைத்துள்ளார்.

**"தான் வாழ்ந்த காலத்தில் வன்னி இளவரசர்களின் வாசல்தலங்களும், வீடுகளும், கோவில்களும் இருந்தது"**

1982 இல் கலாநிதி இரகுபதி இலங்கைத் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து பனங்காமத்தில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட பொழுது கிறித்தவ சகாப்த காலத்தை அண்டிய புராதனமான குடியிருப்புக்கள், இருந்தமைக்கான பல வகையான மட்பாண்டங்களை அங்கு கண்டுபிடித்திருந்தார். இதிலிருந்து அங்கு வன்னியர் குடியேற்றம், வன்னியர் சிற்றரசர்கள் தொடர்பான வரலாறுகள் வெளிச்சத்திற்கு வருவதாகக் கூறியதை பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் அவர்களும் **"வரலாற்று வெளிச்சத்திற்கு வராத பனங்காமம் சிவன்** ஆலயம்" (கலைக்கேசரி) எனும் கட்டுரையில் எழுதியுள்ளார்.

இலங்கையில் வன்னியர் பற்றிய தகவல்கள் கி.பி 13ஆம் நூற்றாண்டளவிலிருந்தே நமக்கு கிடைக்கின்றன. வன்னியர் வட இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்ததை பாளி, சிங்கள இலக்கியங்களிலும், தென்னிலங்கையில் வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் காண முடிகின்றது. அந்த வகையில் கலிங்கமாகனின் ஆட்சியின் நீட்சியில் வட இலங்கையில் வன்னியர் ஆட்சி நிலவியதற்கும் இலக்கியங்கள், தொல்பொருட்சின்னங்கள் ஆதாரங்கள் பகருகின்றன. அவற்றுள் பனங்காமமும் வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாக இருந்துள்ளது. இந்த வரலாற்றுப் பின்னணியில் இருந்து தான் பனங்காமத்தில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் வரலாற்றை நோக்க முடியும் என்று பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் மேற்குறித்த கட்டுரையாக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பனங்காமத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலின் தோற்றம் பற்றி ஆராய்கையில் இக்கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதை உறுதிசெய்வதற்குரிய திடமான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிட்டவில்லை. தற்போதைய திருக்கோயில் கருவறை வாசல் பகுதியில் வைத்துக் கட்டப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள், கோயில் வளவினுள் சிதருண்டு கிடக்கின்ற சிற்பங்கள், கபோதங்கள், கொடுங்கைகள், யாளிமட்டங்கள், பிள்ளையார் சிற்பம், சிவலிங்கங்கள் போன்ற தொல்லியல் சின்னங்களில் தென்படும் கலைமரபின் பாணியைக் கொண்டு அவை புராதனமான காலப் பண்பாட்டுக்குரியன என்று அடையாளப்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து முந்தைய சிவன் கோயிலும் புராதனமானது என்பது புலனாகின்றது.



## பஞ்சலிங்கேச்சரத் திருக்கோயில் சிறப்பு

பனங்காமத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலில் புராதன காலத்தில் சிறப்புப் பெற்ற ஐந்து சிவலிங்கங்கள் இருந்ததாகவும் அவை தமிழ்நாட்டில் உள்ள பஞ்சபூதலிங்கங்களுக்கு ஒப்பானவை என்று கூறப்பட்டதாகையால் 'பஞ்சலிங்கேச்சரம்' என்ற பெயரால் இவ்வாலயம் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. தற்போது அமைந்துள்ள ஆலயத்தில் ஆவுடையாருடன் கூடிய மூன்று சிவலிங்கங்கள் காணப்படுகின்றன. அவை தற்போதும் பூசிக்கப்பட்டு வருகின்றன. இன்னொரு சிவலிங்கம் வவுனியா சாத்திரியாரால் கூழாங்குளம் என்ற இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அமைக்கப்பட்ட ஆலயம் ஒன்றில் வைத்துப் பூசிக்கப்பட்டு வருகின்றது. இன்னுமொரு சிவலிங்கம் சிதைவடைந்த நிலையில் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது.

தற்போதைய சிவாலயத்தில் மூன்று சிவலிங்கங்கள் காணப்படுகின்றது. அவற்றுள் 114 சென்ரிமீற்றர் உயரமும் ஆவுடையாருக்கு வெளியே காணப்படும் இலிங்க உயரம் 43 சென்ரிமீற்றர் உடையதாகவும் சிவலிங்கத்தின் விட்டம் 2.8 சென்ரிமீற்றர் உடையதாகவும் வட்ட வடிவில் அமைந்த ஆவுடையாரின் உயரம் 71 சென்ரிமீற்றர் உடையதாகவும் அதன் சுற்றளவு 90 சென்ரிமீற்றர் உடையதாகவும் காணப்படும் இச் சிவலிங்கம் கருவறையில் மூலவராகக் காட்சியளிக்கின்றார். இவரை இன்றவும் பத்தர்கள் பத்தியுடன் கும்பிட்டும் வருகின்றனர்.

இவ் சிவலிங்கம் கலை எழில்மிக்கதாகவும், வழிபடுபவர் உள்ளத்தில் பத்தியுணர்வை உண்டு பண்ணும் ஆற்றல்மிக்கதாகவும் அமைந்துள்ளது. இவ் இலிங்கம் மாதோட்டம், பாலியாறு, உருத்திரபுரம் ஆகிய இடங்களிலுள்ள திருக்கோயில்களில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கங்களைப் பெரிதும் ஒத்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்துரைத்துள்ளனர். இத்தகு சிவலிங்கங்களை ஆராய்ந்த பேராசிரியர் ப.பு அவர்கள் அவை பெரும்பாலும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குரியவை என்கின்றார். அதாவது பல்லவர் அல்லது முற்பட்ட சோழர்காலத்திற்குரியது என்கின்றார். இதனால் இவ் ஆலயமும் அக்காலத்திற்குரியதாக அமையலாம் என நாம் சிந்திக்கலாம்.

**யாரறி வாரெங்கள் அண்ணல் பெருமையை**
**யாரறி வாரந்த அகலமும் நீளமும்**
**பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்**
**வேரறி யாமை விளம்புகின் றேனே** - திருமந்திரம்

**திருச்சிற்றம்பலம்**

தருமபுர ஆதீன அனைத்துலக...

**(06ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பேரன்புக்கும் வணக்கத்துக்குமுரிய குருமுதல்வர் 27 ஆவது குருமணிகள் சீர்வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளது அருளாசியுரை இடம்பெற்றது.

சுவாமிகள் யாழ்ப்பாணத்து மக்கள் சைவத்தின் மீதும் சைவசித்தாந்தத்தின் மீதும் கொண்டுள்ள பத்தியை எடுத்துக் கூறியதுடன் இலங்கை நாட்டில் அனைத்துச் சான்றோர்களும் இக் கல்வியைக் கற்று பயனடைய வேண்டும் எனவும் அருளாசி கூறியதுடன் எல்லோரையும் மனதாரப் பாராட்டி தருமை ஆதீனம் சார்ந்த பணிகளில் இரு பெண்மணிகள் திருமுறையையும், சைவசித்தாந்தத்தையும் வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கின்றமை குறித்து மிக்க மகிழ்வடைவதாக தெரிவித்தார்கள். சுவாமிகளின் அருளாசியுரையினைத் தொடர்ந்து கற்கைநெறி தொடர்பான விளக்கவுரை ஒருங்கிணைப்பாளர் சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் அவர்களால் வழங்கப்பட்டது. சுவாமிகளின் திருக்கரங்களால் ஒருங்கிணைப்பாளருக்குரிய நியமனக் கடிதம் சித்தாந்தசரபம் அருணை பாலறாவாயன் ஐயா அவர்கள் முன்னிலையிலும் சபையோர் முன்னிலையிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் குழுவினர் பங்கேற்றதுடன் மிகச் சிறப்பாக சுவாமிகளை வரவேற்றிருந்தனர். அத்துடன் வேதபாராயண ஓதுவார்களை சிவசீர் மயூரகிரிக் குருக்கள் ஐயா தலைமையிலும், திருமுறை ஓதுவார்களை சிவத்திரு. தவராசா ஐயா, மற்றும் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் ஐயா தலைமையிலும் ஒருங்கிணைப்பாளரால் ஒழுங்கமைக்கப்பட்டு, தென்மராட்சி தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பாக ஓதுவார்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், சைவபரிபாலன சபைத் தொண்டர்கள், சைவசமய அமைப்பினர்கள் என யாவரும் சுவாமிகளால் கௌரவிக்கப்பட்டனர். மேலும் சைவபரிபாலன சபையால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படும் **“இந்துசாதனம்”** பத்திகையினை தருமையாதீன குருமணிகளினால் வெளியீடும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து நிகழ்வின் இறுதியாக சைவபரிபாலன சபையின் செயலாளர் சிவத்திரு.சே.செல்வராஜன் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டு நிகழ்வுகள் இனிதே நிறைவெய்தின.

நிகழ்வின் நிறைவில் சுவாமிகளுக்கான இரவு உணவு சிவகுருநாத பீடம் வேதாந்த மடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு சுவாமிகள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டு பூசை வழிபாடுகள் மேற்கொண்டதுடன் இரவு உணவின் நிறைவில் அடியார்களுக்கு ஆசியும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுவாமிகளின் இப்பட்டக்கல்விக்கான தொடக்க விழாவினையொட்டி மறுநாள் கீரிமலை புனித நீராடல் நகுலேசப் பெருமான் வழிபாடு, சந்நிதி முருகன் ஆலய வழிபாடு, நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் எழுந்தருளல், கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம மடத்தில் ஐம்பூதநாதர் பூசை வழிபாடுகள் ஆற்றி, ஒருங்கிணைப்பாளர் இல்லத்திற்கும் எழுந்தருளி ஆசி வழங்கியதுடன், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வழிபாடு நிறைவு பெற்று, ஈற்றில் மாவைக் கந்தப் பெருமான் ஆலயம் சென்று பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு சுவாமிகள் மு.ப. 11 மணியளவில் தமிழ்நாடு செல்வதற்காக விமானநிலையம் புறப்பட்டார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்திலும் சுவாமிகளுடன் பயணித்து சுவாமிகளை விமான நிலையத்தில் வழியனுப்பும் வரை கலாநிதி கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் உடனிருந்து பணிபுரிந்ததோடு அனைத்து நிகழ்வுகளையும் எமது நாட்டில் உள்ள அனைவரும் காண நேரலையாக ஒளிபரப்புச் செய்வதற்கு வேண்டி ஐடீஊ நிருபர் சிராஜ் அவர்களை ஒழுங்கு செய்து தந்தார். கூடவே பல ஊடகத்தினர் குறிப்பாக ஓம் தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கும் நன்றி கூற வேண்டியது நம் கடன்.

மேலும், விழா சிறப்புற அமைய அனைத்து வழிகளிலும் அடியேனுக்கு பக்க துணையாக இருந்த சகோதர, சகோதரிகள் ஒலி, ஒளி அமைப்பாளர்கள், சிற்றுண்டிகளை உரிய நேரத்தில் வழங்கியோர், நிகழ்விற்கான அழைப்பிதழ்களை தயாரித்து வழங்கிய சகோதரி கார்த்திகா, சிறுதொகை நிதியுதவி வழங்கிய அன்பார்கள், மேலும் குறிப்பாக மட்டக்களப்பு சைவபண்டிதர் சபையினர் இவ்விழாவிற்கான வாழ்த்துபவை ஒன்றினை அனுப்பி வைத்திருந்த அன்பர்கள் என பலருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தக் கற்கை நெறியானது இங்கு ஆரம்பிப்பதற்கு மூல காரணராக விளங்கிய சித்தாந்த சரபம் அருணை பாலறாவாயன் ஐயா அவர்கள் என்றும் எம் வாழ்வில் நன்றிக்குரியர் ஆவார். ஐயாவை எமக்கு அறிமுகம் செய்த சைவசித்தாந்த துறைத் தலைவர் கலாநிதி பொ. சந்திர சேகரம் ஐயா உள்ளிட்ட விரிவுரையாளர்கள் அவர்களின் ஆலோசனைகள் எம்மை என்றென்றும் நல்வழியில் இட்டுச் செல்லும். இவ்விழாவானது இறையருளாலும் நல்லாசான்கள் வழிகாட்டுதலாலும் இனிதே நிறைவெய்தியமை எமது மண்ணின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது என்பதில் எள்ளளவு ஐயமும் இல்லை எனலாம். நன்றி

திருச்சிற்றம்பலம்

# தருமபுர ஆதீன சைவசித்தாந்த மையத் தொடக்க விழா (05-04-2026)

















# தீயில் குளித்தருளி, குற்றமற்ற மறை முனிவர் ஆகிய திருநாளைப்போவார் நாயனார் (நந்தனார்)



குலநெறியில் நின்று விலகாது பிறந்த நாள் முதல் சிவ சிந்தனையில் தவமியற்றி, பிறந்த குலத்திற்கும், இறை அன்பிற்கும் தொடர்பில்லை, இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது தூய்மையான பத்தியே என்பதை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டிய திருநாளைப் போவார் நாயனாரை, சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் **"செம்மையே திருநாளைப் போவாருக்கும் அடியேன்"** என்று போற்றுகிறார். ஆதனூரில் புலையர் குலத்திலே அவதரித்த இவர் சிவபெருமானின் மீது சிறுவயது முதலே பத்தி கொண்டு திகழ்ந்தார். இறைவனின் கோயில்களுக்கு நேரடியாகச் சென்று சிவதொண்டு புரிய முடியாவிட்டாலும் **'புறத்தொண்டு'** புரிந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, கோயில்களுக்குப் பேரிகை முதலான கருவிகளுக்கு வேண்டிய




சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி


போர்வைத் தோல், நரம்புகள், பூசைப் பொருளான கோரோசனை போன்ற பொருள்களை இலவசமாக கொடுப்பதற்காக, நந்தனார் ஒவ்வொரு நாளும் கோயில்களை நோக்கிச் செல்வார். கோயில் வாயிலில் நின்று, தாம் கொணர்ந்த பொருட்களைக் கொடுத்துவிட்டு, திருக்கோயில்களுக்கு முன் நின்று கொண்டு பேரன்புப் பெருக்கால் ஆடுதலும் பாடுதலும் செய்து மகிழ்ந்து கோயிலையும், கோபுரத்தையும் வணங்கி இன்பமுற்றார்.

நந்தனாருக்கு திருப்புன்கூரில் உள்ள சிவலோக நாதரை

வணங்கி, தம்மால் இயன்ற அளவு திருப்பணிகள் செய்து மகிழ வேண்டும் என்று விரும்பி அத்திருக்கோயிலை சென்று வாயிலினின்று இசை பாடி வணங்க முயன்ற போது முன்னால் இருந்த நந்தி மறைத்ததால் வேதனை தாங்காது கண் கலங்கினார். நந்தனார் வாசலிலிருந்து ஈசனை நினைத்து உருகி சிவசிவ என்று இறைவன் திருநாமத்தையே ஓதிக் கொண்டிருந்தார். மனம் நைந்து உருகும் பத்தனைக் காக்கத் திருவுள்ளங் கொண்ட நாதர் தம்மை மறைத்துக் கொண்டிருந்த நந்திதேவரை வலதுபுறம் விலகி இருக்குமாறு ஆணையிட்டார். இறைவனின் ஆணைப்படி நந்திதேவர் விலகியதும் சிவலோகநாதரின் திருத்தோற்றத்தைப் பார்த்து நிலத்தில் வீழ்ந்து பன்முறை வணங்கினார் . இக்காட்சியை சேக்கிழார்,

**சீர் ஏறும் இசை பாடித் திருத் தொண்டர் திரு வாயில்**
**நேரே கும்பிட வேண்டும் என நினைந்தார்க்கு அது நேர்வார்**
**கார் ஏறும் எயில் புன் கூர்க் கண் நுதலார் திரு முன்பு**
**போர் ஏற்றை விலங்க அருள் புரிந்து அருளிப் புலப்படுத்தார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:24:17)**

என எடுத்தியம்பி உள்ளார். சிவநாமத்தைச் சிந்தையிலே கொண்டு அவ்விடத்தில் குளத்தை வெட்டினார். பின் கோயிலை வலம் வந்து மன நிறைவோடு ஆதனூருக்குத் திரும்பினார்.

நந்தனாரின் பத்தி உள்ளத்தில் தில்லைக்குச் சென்று அம்பலக் கூத்தனை வழிபட்டு வரவேண்டும் என்ற ஆசை எழுந்தது. தன்னால் கோயிலின் உள்ளே சென்று ஆடலரசனை வழிபட இயலாத சூழ்நிலை நினைவுக்கு வர அவருக்கு சோர்வு ஏற்பட்டது. இருந்தாலும் **'நாளைப் போவேன்'** என்று துணிவார். ஆனால் பொழுது புலர்ந்ததும், அக்கால கட்டுப்பாட்டினை நினைந்து புறப்படாமல் நின்று விடுவார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் நாளைக்குப் போவேன் என்று எண்ணி நாளைக் கடத்திக்கொண்டே வந்த நந்தனார் திருநாளைப் போவார் என்றே திருநாமத்தைப் பெற்றார்.

தில்லை செல்லாவிட்டால் வாழ்நாள் வீண் என்ற எண்ணம் நந்தனாருக்கு ஏற்பட, ஒருநாள் துணிவு கொண்ட நெஞ்சத்தோடு தில்லைக்குப் புறப்பட்டார். தில்லையை அடைந்த நந்தனார், அம்பலத்தரசன் கோயிலின் மதிற்சுவர் அருகே சென்றார். அங்கே வேத ஒலியும், வேள்விப் புகையும் கோயிலினுள் இருந்து வருவதை உணர்ந்தார். 'கோயிலிற்குள் சென்று இறைவனின் திருநடனத்தைக் காண்பதற்கு தகுதி இல்லை என்பதை உணர்ந்து மனதிற்குள் உருகினார். மதிலை வணங்கினார். இரவும் பகலும் திருமதிலையே வலம் வந்துகொண்டிருந்தார். சோர்வு மிகுதியால் கோயிலின் மதிற்சுவர் அருகே படுத்து உறங்கினார்.

**இப் பிறவி போய் நீங்க எரியின் இடை நீ மூழ்கி**
**முப்புரி நூல் மார்பர் உடன் முன் அணைவாய் என்ன மொழிந்து**
**அப் பரிசே தில்லை வாழ் அந்தணர்க்கும் எரி அமைக்க**
**மெய்ப் பொருள் ஆனார் அருளி அம்பலத்தே மேவினார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:24:28)**

என்ற திருத்தொண்டர் புராணத்தினூடாக சேக்கிழார், நந்தனாரின் கனவில் தோன்றிய நடராசர், **"இப்பிறப்பின் கருமம் கழிய வேள்வித் தீயில் புகுந்தெழுந்து முப்புரி நூலணிந்து திகழ்வாய்"** என்று திருவாய் மலர்ந்தார். அதே சமயத்தில் அங்குள்ள தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலே தோன்றி என்னை வழிபட்டு மகிழும் நந்தனார் **"மதிலின் புறத்தே படுத்திருக்கிறான்"** நீவிர் அவனை அழைத்து வந்து தீயிடை மூழ்கச் செய்து என் சந்நிதிக்கு அழைத்து வாருங்கள் என்று ஆணையிட்டார்.

தில்லைவாழ் அந்தணர்கள் மகிழ்ச்சியோடு எழுந்து நடராசப் பெருமான் பணித்தபடி தீ மூட்டித் தருகிறோம். **"நெருப்பிடை மூழ்கி எழுக"** என்று வேண்டிக் கொண்டார். **"இறைவனின் ஆணைப்படி நடக்கட்டும்"** என்று நந்தனார் கூறினார். அந்தணர்கள் திருமதிலின் தெற்கு வாயிலுக்கு புறத்தே நெருப்பை மூட்டி நந்தனார் மூழ்கி எழுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். அந்தணர்கள் திருமதிலின் தெற்கு வாயிலுக்கு புறத்தே நெருப்பை மூட்டி நந்தனார் மூழ்கி எழுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

அம்பலத்தரசனை மனத்திலே நினைத்தவராய் மூட்டிய தீயினை வலம் வந்து தீயினுள் மூழ்கி எழுந்த நந்தனார் உருத்திராக்க மாலையும், முப்புரி நூலும் அணிந்த தேகப்பொலிவுடன் திருவெண்ணீறு அணிந்து மாமுனிவர் கோலத்துடன் நெருப்பிலிருந்து வெளிப்பட்டார். தில்லைவாழ் அந்தணர்கள் நந்தனாரின் அருள் வடிவத்தைக் கண்டு, அகமகிழ்ந்தனர். அவரை வாழ்த்தி வணங்கினர். தில்லைவாழ் அந்தணர்கள் வழிகாட்ட நாயனார் அம்பலத்தரசன் சந்நிதியை நோக்கிச் சென்று ஈசன் திருவடி நீழலிலேயே ஐக்கியமானார்.

தன் வாழ்நாள் முழுவதும் தீண்டாமைக் காரணமாக கோயிலுக்கு வெளியே இருந்தும், சிவபெருமானின் மீதான தீராத பத்தியால், சிதம்பரம் திருத்தலத்தில் தீக்குளித்துச் சுத்தமாகி, கோயிலுக்குள் சென்று அம்பலத்தரசன் திருவடி நிழலை அடைந்து புரட்டாசித் திங்கள் ரோகிணி நாண்மீனில் முத்தி பெற்றவரே நந்தனார்.

**திருச்சிற்றம்பலம்**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**திருநகரச்சிறப்பு : பாடல் 43**

**மன்னவன்தன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை**
**முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கா லூர்கவென**
**அன்னவனு மதுசெய்யா தகன்றுதன்னா ருயிர்துறப்பத்**
**தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான்**

பொருள்:– தன்மகனை அழைத்துவரச் செய்து மந்திரி ஒருவனை நோக்கி "இவனை அந்த வீதியிலே வலிய தேர்க்காலின் கீழ்க் கிடத்தி தேரை இவன் மீதில் ஊர்ந்து விடுக" என்று கட்டளையிட, அவ் அமைச்சரும் அது செய்யாது போய்த் தன் அரிய உயிரைத் துறந்தானாக, அதனை அறிந்த அரசன் தன் குல மகனை முறை செய்தற்காகத் தானே கொண்டு அவ்வீதியில் சென்று சேர்ந்தான்.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

**வி.உரை:-** ஒரு மந்திரி:– முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சன் என்று குறித்த ஒப்பற்ற ஒரு மந்திரி.

**அவ்வீதி:-** பசுக்கன்று தேர்க்காலின் ஊரப்பெற்று இறத்தற்கிடமாகிய அந்த வீதி. அரசன் தீர்ப்புச் சொல்லிய இடம் அரண்மனை ஆதலாலும், கொலை முதலிய பெரும் குற்றம் செய்தாரைப் பிறர்க்கு எடுத்துக்காட்டாக இருக்கும் பொருட்டு குற்றம் நடந்த அந்த இடத்தில் முறை செய்தல் அந்நாள் நீதி வழக்கு. இதனையே ஆங்கில ஆட்சியினரும் பின்பற்றிக் கொலை, தூக்கு, சதுக்கங்களில் வைத்து குற்றவாளிகளை முறை செய்து வந்தனர் என்று சிவக்கவிமணி ஐயா பேருரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**முன்தேர்க்கால் ஊர்க:-** 'செய்தார்க்குச் செய்தபடி தண்டம் விதித்தல்' எனும் தண்டநூல் விதிப்படி கன்று தேர்க்காலில் ஊரப்பட்டபடியே இவனையும் தேர்க்காலூர்க என்று முறைசெய்தானாகும். இறைவன் முறை செய்வதும் இவ்வாறே என்பது அறநூல் (சாத்திரம்).

**அது செய்யாது தன் உயிர்துறப்ப:-** இக்குற்றத்திற்கு தீர்வு மகனை அறநூல்படி நிறுத்துதலேயாம் என்று தாம் அறிவித்தவாறு சொல்லிய அமைச்சர்களிலே தலைவனான இவ்வமைச்சனுக்குத் தன் மனத்தின் உண்மைக்கு மாறுபாடான இச் செயல் செய்ய மனம் ஒருப்படவில்லை. அன்றியும் உலகம் போற்றும் குணத்தானாய்த் தவத்தால் பிறந்த அரச குமாரனாயும் தன் தலைவனாயும் உள்ள அவனைத் தேர்க்காலில் ஊர்தலாகிய அரிய செய்கையில் அவன் மனம் துணியவில்லை. அரசன் ஆணைப்படி

செய்யாமல் இருந்து அதன் பொருட்டு அரசன் தன்னை முறைசெய்ய நின்று மானம் அழிதற்கும் ஒருப்படவில்லை. ஆதலின் மனம் துணியாத செய்கையைச் செய்வதைக் காட்டிலும் உயிர் துறத்தலே மேலென்று தன்னரிய உயிரைத் தானே துறந்து கொண்டனன்.

**"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி தின்னுயிர் நீக்கும் வினை" (குறள்)**

தற்கொலை செய்துகொள்ளல் பெரும் பாவமேயாயினும் தன் உயிரினும் சிறந்ததாய் தான்கொண்ட கொள்கையும் மானமும் அழிவுபடவாராமல் காத்தற்கும், இது கொலையே ஆதலின் அதன்பழி வராமல் காத்தற்கும் உயிர் துறந்தனன்.

**"வேந்துமகத் தேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான் சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா"** என்று மாதவச் சிவஞான முனிவர் விதந்து எடுத்துக் காட்டியிருத்தலும் காணலாம்.

### பாடல் - 44

**ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதுமுணரான்**
**தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்**
**மருமந்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்**
**அருமந்த அரசாட்சி அரிதோ?மற்று எளிதோ?தான்.**

**பொருள்:-** மனுவேந்தன் தனது குலத்தை வளர்த்து வழிவழிச் செலுத்தற்குரியவனாய்த் தனக்கு மகனாயுள்ளான் இவ்வொருவனே என்ற செய்தியையும் மனத்திலே உணராதவனாகி தருமந் தன் வழியிலே செல்வதே கடமை என்ற ஒரே எண்ணத்தை உடையவனாய் தன் மகனை அவ்வீதியிலே கிடத்தி அவனுடைய மார்பிலே தனது தேர்ச்சக்கரம் ஏறிச் செல்லும்படி தனது தேரை ஊர்ந்தனன். உலகத்துக்கு அருமருந்து போன்ற அரசாட்சி செய்வதுதான் செய்தற்கு அரியதோ எளியதோ என்பது சிந்தித்தற்குரியது.

**வி.உரை:-** ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்:- இவன் தனக்கு ஒரே மகனாதலின் இவனைத் தேர்க்காலில் ஊர்ந்துவிடில் தனது குலம் வழிவழிச் செல்லவேறு மகனில்லாது தன்னோடு நின்றுவிடும் என்ற செய்தியையும் அரசன் சிந்திக்கவேயில்லை என்பார் உணரான் என்றார்.

**தருமம்தன் வழிச்செல்கை:-** அறநெறியிலே செல்லுதலே இது செய்யானாயின் தருமம் தன்னோடு வழியற்று நின்றுவிடும். அவ்வாறு நின்றுவிடாது தனக்குப் பின்னும் நிலவுவதாய்த் தன்வழியாக நடந்து செல்லும்படி செலுத்துவதே என்றுரைத்தலுமாம்.

**கடன்என்று:-** "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்றவாறு இறைவன் ஆணையிட்ட அறத்தின்வழி நிற்றல் தன் கடன் என்று துணிந்தான்.

**மருமம்:-** மார்பு, தன் கொற்ற ஆழியை அவன் தோளிலே ஏற்றுதலுக்கு மாறாகத் தேராழியை மருமத்திலே ஊர்ந்தனன் என்று குறிப்பார். இங்ஙனம் கூறினார் போலும்.

**அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோ? தான்:-** இஃது இச் செயலில் இருந்து ஆசிரியர் கற்பிக்கும் கற்பனை. பிறர் எண்ணுவதுபோல் எளியதன்று மிகவும் அரியதேயாம் என்பது கருத்து. எளிதோ என்பதில் எதிர்மறையும், அரிதோ - என்பதில் உடன்பாடும் குறித்தன.

**அருமந்த:-** அரிய மருந்துபோன்ற அருமருந்து நோய்ப் பயம் தீர்த்து மேலும் வாராமல் காப்பதுபோல, அரசாட்சியும் ஐந்து பயத்தையும் தீர்த்து அறத்தைப் பிறழாமல் காப்பதனால் அருமருந்தன்ன என்றார். இறைவனை **"அடியார்தம் அல்லல்தீர்க்கும் அருமருந்தை"** என்பது திருநாவுக்கரசு பெருமான் திருவாக்கு.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**"சிவனும் இராமனும் ஒன்றா? இராமனும் திருமாலும் ஒன்றா? சிவனும் திருமாலும் ஒன்றா?" என்னும் கருத்துபேதங்கள் சிலரால் ஏற்படுத்தப்பட்டவாறுள்ளது. கம்பர் தமது இராமாயணத்தின்கண் சிலவிடத்து இராமனைச் சிவபெருமானாகவும் சிலவிடத்து திருமாலாகவும் உவமிப்பதுகொண்டு, சிவபெருமானும் திருமாலும் இராமனும் ஒன்றுதான் என்றும் இவர்களில் பேதங்காண் போர் அபக்குவர் என்றும் கம்பராமாயணத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய சிலர் கருத்துரைத்துக் குழப்பங்கள் உருவாக்கிவருவதும் கண்கூடு! சைவசித்தாந்தரீதியில் இக்கருத்து ஏற்புடையதா?**

**சிவனெனவே தேவரையுஞ் சிந்தி அவனை**
**அவனெனக் கண்டார் நிரயத்தார்** - **சங்கற்ப நிராகரணம் (சிதம்பரம் கண்கட்டி மடம் மறைஞானசம்பந்தர் அருளியது.)**

எந்தத்தேவரிலும் ஒருவன் சிவபெருமானைக் கண்டு இன்புறலாம். ஆனால், சிவபெருமானில் அத்தேவரை ஏற்றி எவரேனும் சிந்திப்பாரேயானால், அத்தகையோருக்குக் கடுநரகமே கதியாகும் என்பது இக்குறளால் நன்கு தெளிவுறும். ஒருவன் தன்னுடைய தாயில் தந்தையில் குருவில் சிவபெருமானைக் கண்டு இன்புறலாம். சிவனடியாரில் சிவபெருமானைக் கண்டு இன்புறுவது சைவர் வழக்கு. எனவே, கம்பனும் சரி கம்பரின் அடிபொடிகளும் சரி, இராமனில் சிவபெருமானைச் சிந்தித்து வழிபடுவது எவ்வகையிலும் சைவருக்கு இடரில்லை. ஆனால், சிவபெருமானில் இராமனைப் பாவிப்பது பெரும் நரகத்தையே ஏற்படுத்தும் என்க.

**மாயமான் தன்னைப் பொய்ம்மான்**
**என அறியாதது அரக்கன்**
**மாயையில் அகப்பட்டுத்தன்**
**மனைவியைக் கெடுத்தான் தன்னை**
**மாயைக்குக் கர்த்தா என்பை**
**மதிகெட்டங்கு அவனைக் கொன்று**
**நாயனார் தமைப்பூ சித்தான்**
**கொலைப்பாவம் நணுகிடாமே** - **சிவஞானசித்தியார் பரபக்கம் பாஞ்சராத்திரி மறுதலை - 15**

**"இராமனாக, வனத்திலே வந்த பொய்ம்மானை அறிவால் அறிய முடியாது, அதன்பின் சென்றதால் இராவணனிடம் தன் மனைவியை இழந்தவனை, மாயைக்கே தலைவன் என்கிறாய். மதியற்ற இராவணனைக் கொன்ற பாவம் தன்னைப் பீடிக்காதிருப்பதற்காக இராமேசுவரத்தில் சிவலிங்கம் தாபித்து வணங்கினான். எனவே, இராமன் ஒரு உயிர்வர்க்கமேயாவான்."** என்று, சந்தானகுரவர் அருணந்தி சிவாசாரியார் அருளிய சிவஞானசித்தியார் எடுத்துரைப்பதே சைவசமயத்தார் சிரசிற் கொண்டொழுகவேண்டியதாம்.

சைவசமயம் பிறப்பு இறப்பை வினையின் விளைவென்றே கூறுகின்றது.சைவ நாயனாரில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய தோற்றத்தையே திருக்கயிலாயத்தில் வினைவசப்பட்டமையினால் என்று உணர்த்தி நிற்கும் உயர் நெறியாகும். சைவசமயத்தின் கடவுள் கொள்கையென்பது, கடவுள் ஒரு போதும் வினைவயப்படமாட்டார் என்பதாகும். எனவேதான், **'பிறவா யாக்கைப் பெரியோன்'** என்றும், **'பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்'** என்றும் சைவசமயம் சிவபெருமானைக் கொண்டாடுகின்றது.

திருமால்மச்சஅவதாரம், கூர்மஅவதாரம், வராக அவதாரம், வாமன அவதாரம், நரசிம்ம அவதாரம் எடுத்தவேளைகளில் சார்ந்ததன்வண்ணமாகி ஆணவமுற்று நின்றவேளைச் சிவபெருமான் அடங்கிய வரலாறுகளும், பரசுராமர் இராமர் பலராமர் கண்ணன் அவதாரங்களில் சிவபெருமானை வழிபட்டு உய்வுபெற்ற வரலாறுகளும் ஆன்றோர் அறிவர். திருஞானசம்பந்தப்பெருமான் இராமேசுவரப்பதிகத்தில் இராமனால் வழிபடப்பட்ட வரலாற்றினைச் சிறப்பித்துப் பாடியருளியிருப்பதும் கண்கூடு. வால்மிகி இராமாயணத்தில் சீதையைப் பிரிந்து இராமன் தவித்து அழுது ஏங்கி நின்ற செய்திகளும், சராயுநதியில் மூழ்கி மானிடப்பிறப்பை நீத்த வரலாறும், மகாபாரதத்தில் வேடனின் அம்புபட்டு கண்ணன் மானிடப்பிறப்பை நீத்த வரலாறும் விளங்குவது வினைவயப்பட்ட உயிர்களே இவர்களாம் என்பதற்குத் தக்கசான்றுகளாம்.

**தவகுணனாய் மால்சென்று**
**தீவியைச் சக்கிரத்தால்**
**அவகுணம் செய்தன்று ஓடப்**
**பிருகுவந்தவளைப் பார்த்துச்**
**சிவனலது அறியேனாகில்**
**இதுசெய்தோன் செறிக பத்துப்**
**பவமென மொழிய மாலும்**
**பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான்** - **சிவஞானசித்தியார் பரபக்கம் பாஞ்சராத்திரி மறுதலை - 29**

**இப்படிப் பிருகு சாபத்து**
**ஈர் ஐந்து பிறப்பில் வீழ்ந்து**
**மெய்ப்படு துயரம் உற்று**
**வருபவன் விமலன் அல்லன்** - **சிவஞானசித்தியார் பரபக்கம் பாஞ்சராத்திரி மறுதலை - 31**


திருமால், பிருகுமுனிவரின் மனைவி தீவியையிடம் சென்று தன்னைச் சேருமாறு கேட்டு வலியுறுத்தியபோது, தீவியை நிராகரித்துவிடவே, தன்னுடைய சக்கராயுதத்தால் தீவியையின்மேனியில் காயங்கள் உண்டாக்கிச்சென்றான் என்றும், இதனை அறிந்துகொண்ட பிருகுமுனிவர் தாம் சிவபெருமானைத்தவிர வேறுதெய்வம் தொழுது அறியேன் என்பது உண்மையானால், என் மனைவியிடம் தவறாக நடந்தவன் பத்துப்பிறவி எடுத்து உழல்வான் என்று சாபம் இட்டார் என்றும், அச்சாபத்தை நீக்கியருளிடவேண்டிச் சிவபெருமானிடம் திருமால் வருந்தி இறைஞ்சி நின்றபோது, சிவபெருமான் பூமியில் பிறந்து தர்மத்தை நிலைநிறுத்தப் பயன்படுத்துமாறு அருளிச்செய்தார் என்றும், திருமாலின் பத்து அவதாரங்களும் சாபத்தால் விளைந்தவையேயொழிய திருமாலின் பராக்கிரமத்தாலல்ல என்பதுவும் புராணாதி விசயங்களால் உறுதியாவதுடன், மெய்கண்ட சாத்திர நூலாகிய சிவஞானசித்தியாரினாலும் நிறுவப்பட்டிருப்பதுவே சைவசமயத்தாருக்கு உரியதாகும்.

**(தொடரும்...)**

**எல்லாம் திருவருட் சம்மதம்**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Tamil Science Festival - A Powerful Event

The imminent Tamil Science Festival, planned in collaboration by the Tamil societies of USYD, UNSW, and Macquarie, is a significant attempt to rethink the understanding of the interrelation between culture and science. Modern discourse tends to view science and tradition separately, as if culture and scientific thought were alien to one another. The current event questions this perspective by demonstrating the richness of the knowledge systems of Tamil and highlighting their significance.

The book release ceremony conducted by Mannar Mannan is one of the highlights of the event and will certainly enrich the discourse of the event since it deals with the history, identity and knowledge tradition associated with the Tamil culture. By placing the book launch along with lectures and debates on the topic of the book of whether Tamil New Year must be celebrated based on Thai or Chithirai calculations, the significance of science, astronomy, season and time has been recognised. The latter are certainly more than mere cultural considerations; they are scientific facts that are ingrained within Tamil tradition.

In a university setting, one tends to dissociate his/her cultural identity from his/her academic achievements. But here too it must be said that this need not necessarily be the case for Tamil students. Since Tamil civilisation has been contributing to fields such as medicine through the system of Siddha medicines, architectural marvels through the exacting design of temples and linguistics through the structure of the Tamil language, there is certainly much that a student can learn from one's own culture.

This association of the three major universities is also symbolic of a larger trend within the Tamil diaspora. It is no longer the case that Tamils work separately within their own communities; instead, it is becoming increasingly common for younger generations to think together and form a platform that is rooted in culture as well as intellect. Such unification helps not only in building up culture but also in giving it credibility and weight in academic circles.

In essence, what is so important about the Tamil Science Festival is its ability to put a different spin on the notion of culture. Instead of limiting the discussion of Tamil culture to its ritualistic aspects, such events help explore the philosophy behind it, its science, and its history.

The event is set to happen on the 8th of May at Wentworthville Redgum Centre at 6:30 PM. Please register your attendance on the Thennadu Website.

# Saiva Saint Thirunalaipovar Nayanar - The procrastinator




Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

Among the sixty three, the Periya Puranam sets Thirunalaipovar Nayanar in the seventeenth place, within the Chola country at Adanur, and frames his account through the oldest controversy that a sacramental order can be asked to answer, which is the question of who may cross its threshold. The narrative extends across two temple sites, Tiruppungur and Thillai, and its movement is the slow approach of a body that has been formed, by birth and by trade, on the far side of a line that the temple (high society and its conservative culture) itself has drawn. The discipline preserved in the earlier account of Ruthira Pasupati Nayanar was the discipline of a single act held without break, water and recitation and the unbroken attention of a scholar sustained through night and day. The discipline recorded here belongs to a different order of the internal life. It is the discipline of a soul's wish carried across at least 2 human lifetimes, spoken daily and daily deferred, a wish whose speaking produces the saint's name and whose eventual fulfilment requires the annihilation of the body that has carried it.

Later renditions, most visibly Gopalakrishna Bharati's Nandanar Charithram, have carried the nayanar's image into theatrical and devotional registers that Sekkizhar's composition could not have anticipated, and the saint now occupies a place in the imagination of Tamil devotional culture that exceeds, by a considerable measure, the compressed verses in which he is canonically preserved. The present reading does not follow him into that afterlife. The article concerns itself with what is recorded in the Periya Puranam, the source from which the most popular and relatable Nandanar of later centuries was first drawn, and it holds to what those sources sustain.

Nandanar is that of a leather-curer from the settlement at Adanur, whose family trade lay in the preparation of skins, straps, and strings for the drums and the veena of the temple. The verses name him with a directness that places him in the lowest caste. He is called matchless in society for the wrong reasons. His labour served the temple without ever admitting him to it. The very instruments through which the sanctum's sound was made, the percussion support from his drums, and the veenai whose string carried the deeply Tamil tradition of melodies, were prepared by hands whose entry into the space, was prohibited. This is the first stark aspect of his reality, the Puranam records, and it is preserved through every episode that follows without mitigation.

The outward expression of his devotion is given in the account with care. There is ecstatic song. There is dance undertaken in the self-forgetfulness that the Saiva tradition reserves for those whose interior has been wholly given over to the divine. There are repeated approaches



to Siva temples from which he was excluded, and at Tiruppungur there is the episode which every reader of this account pauses upon. The Nandi is moved aside. The enshrined form becomes visible from the position at which the devotee has been permitted to stand. The account reports the movement quite simplistically (unlike in Nandanar Charitham which made his story popular amongst the masses).The concession here is divine, and it is, in its very generosity, a confirmation of the condition it accommodates. The saint remains outside. The stone bull shifts. The temple, in its institutional sense, does not.

A key symbolism here is that the Bull, is 'Pasu', and the adjustment it makes to accommodate the Nayanar signifies that, once a person has already been rid of 'Pasam', he or she must still alleviate themselves from 'Pasu' to understand the significance of reaching 'Pathi' and thus the state of Mutthi (veedu peeru). This derives from the Saiva Siththantha traditions further solidifying Nandanar's involvement in Saiva learning and teachings across all times.

## The vow of tomorrow/ Procrastination

The central difficulty of the Periya Puranam, the point at which the narrative asks most of its reader, begins in the years that precede the arrival at Chidambaram. His greatest wish, the text records, was to reach Thillai. That wish he spoke to all whom he encountered, announcing each day that he would depart for the temple upon the morrow, and the repetition of that single declaration across an unmeasured span of days produced the name by which the tradition has preserved him. 'Thiru-Nalai-povar', he who goes tomorrow. The Periya Puranam preserves the internal form of the delay with a precision that is almost embarrassing. After sunrise he lay immobile, and within his own mouth two statements contended: "my caste has no right to go in, or, this be my Lord's wish". Then with devotion he would say, "I shall go tomorrow". The two statements are held in a single verse in the songs

by Sekkizhar, and the verses decline to indicate which of them is prior, which is the proposition and which is the consolation, or indeed whether such a distinction has any purchase upon a mind that has lived inside the oscillation long enough that the oscillation has become the mind itself.

A lesser reading of the account would treat the deferral as psychological weakness, or as the paralysis of a devotee insufficient to his own wish. The Puranam does not invite that reading. What it records is something closer to the structure of a vow that cannot be discharged within the conditions of its speaking, and whose daily renewal is itself the form that the vow takes. The devotee rises each morning to the same recognition, that the body through which his devotion must pass is also the body which that devotion's object has been given the right to refuse, and each morning he declines to convert that recognition into grievance. He converts it, instead, into speech. He says that he will go. The saying is the observance. The deferral is the discipline his mortal body carries, the one he occupies in this life. The name he receives is the name of a refusal sustained across a duration long enough that it comes to constitute the identity of the one who refuses, this would be a meditative version of procrastination as we call it these days.

### The blaze at Thillai

The most special day of his arrival at Chidambaram does not complete the account. Nandanar reaches the outskirts. He tarries there, imagining the sights within, and upon the recognition that he holds no right to partake of them he is overcome first by depression and then by sleep. The resolution arrives in the oldest mode such resolutions are delivered in the literature of the Saivite saints, which is the mode of parallel dreams. The Lord appears simultaneously within the sleep of the devotee and within the sleep of the priests of Thillai, and in both appearances He delivers the same command, that sacrificial fires be prepared for the saint's purification. Nandanar enters the fire with his hands folded in salutation and Sivaperuman's iconography in his mind, as the mortal life and coil of the saint did not have the privilege to learn and imbibe the Namasivaya chant. This blaze is positioned as a gift from the lord, to society as a whole and to Nandanar, as it is nandanar, who was most plagued with the imposter syndrome, to a point where this ritualistic cleansing would give him great peace. The society here got to learn that this ritual was offered specifically for the reason of the Saint's inner peace and not some ceremony of assertion of social ranks. Then, from the fire he rises as a sage, long locks and thirunool across his chest.

Here it is important to note that the Fire or the Bull earlier were Not Tests. The devotion that preceded the fire was already complete, and the Puranam does not ask us to entertain the possibility that it required testing. What the fire removes is the body marked by birth. What emerges is a form that Nandanar himself desires. The theological claim embedded in this structure is severe. The saint's interior condition required no correction. The condition that required removal was the one imposed from outside, the condition of the birth into which the devotee had been placed, and its removal was effected by the Lord Himself, without mediation from the community that had imposed it and without mortal petition from the one upon whom it had been imposed.

### The unspoken weight of the account

The Puranam, having delivered its resolution, declines any extension into social commentary. The brahmins of Thillai are described as good, and they salute the saint before the blaze and upon his emergence from the fire. Numerous devotees pay their respects both before and after. He enters the hall to worship the feet that dance within it. The sequence is preserved without irony and without qualification, and it is from this very restraint that the account's most difficult interpretive edge is generated. The mechanism by which the reception is made possible remains visible to any reader willing to hold the account at the distance it requires. The saint's birth had to be burned away before the temple could receive him. Whether this records a transcendence of caste, which is the reading that devotional tradition has most frequently returned, or a concession to the ordering logic of caste, which is the reading that has been offered by more recent commentators who have attended to the account's implications with greater rigour, the Puranam declines to adjudicate. Both readings stand upon the text. The devotion was matchless from the first, and the matchlessness required consummation by fire before the sanctum could hold it. The account records the fact and leaves the interpretation to those who come after.

This is the analytical edge upon which the tradition has continued to think across the centuries of its reception, and it is the edge at which the account discloses its occult structure, if that word may be permitted in the sense of a teaching preserved through narrative rather than through doctrine. The saint is remembered as the one who reached Thillai. He is remembered, with equal weight, as the one whose reaching required ordeal. The two memories are inseparable within the Puranam, and the Puranam makes no motion to separate them, because the inseparability is itself the teaching. The sanctum is crossed. The body through which the crossing is made does not survive it.

### Remembrance

Thirunalaipovar Nayanar's remembrance rests in the claim that devotion is not conditional upon birth, and in the account's steadfast refusal to pretend that the claim was ever uncontested. His distinction within the sixty three lies in the sustained holding of a deferred wish across a lifetime, and in the ordeal through which that wish was finally closed. The account preserves him as one whose labour served the sanctum he could not enter, whose name was given him by a vow he could not immediately keep, and whose final passage was granted through a vision delivered in parallel to the barred and the privileged. That is the core basis upon which he is remembered, year on year on the Puratasi-Rohini day, later popularised by Gopalakrishna Bharatiyar in his opera, the Nandanar Charithram.

# யாழ் பல்கலைக்கழக முதலாவது சைவசித்தாந்த ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் நல்லூர் ச.சரவணன் அவர்களின் ஆதார சுருதி உரை



பேராசிரியர் நல்லூர் ச.சரவணன்
தலைவர் - சைவசித்தாந்த துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

ஆதார சுருதி உரையானது இரண்டு சிந்தனைகளை உங்களுக்கு முன்வைக்கின்றது. ஒன்று நம்முடைய மரபானது அல்லது தமிழர் தத்துவ மரபு என்று சொல்லப்படுகின்ற சைவசித்தாந்தம் எப்படிப்பட்ட சிந்தனையை உலக அளவில் தற்கால சூழமையை எதிர்கொள்கிறது. அல்லது தற்கால சூழமைவிற்கு எப்படி தன்னுடைய கருத்தியலை வழங்கியிருக்கிறது என்பதனை நாம் தெரிந்து கொள்கின்ற ஒரு அடிப்படை வரலாற்றையும், நம்முடைய கருத்தியல் அல்லது கொள்கை விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பது தான் என்னுடைய இரண்டு வகையான செய்திகளாக அமையும்.

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

இந்த தான் கடவுள் என்பதாக உருவான இந்த நிலைமைக்கு பெயர்தான் அத்துவித மரபு. தொடக்க கால அத்துவித மரபு என்பது சங்கர வேதாந்தம் அல்ல, இந்த அத்துவித மரபு என்பது ஒரு ஆண் தன்னையே கடவுளாக தன்னுடைய பயிற்சியின் மூலமாக தான் மாற்றம் பெறுவதை விளக்குவது. இதைத் தான் நாம் இதனுடைய எச்சங்களைதான் காஷ்மீர சைவத்தில் பார்கிறோம். இந்த அத்துவித மரபுக்கு வேறான ஒரு அடுத்தகட்ட மரபு தான் துவைத மரபு. இது மத்துவருடைய துவைத மரபு அல்ல ஒரு ஆண் தன்னைக் கடவுள் நிலையில் மாற்றிக்கொள்கிற அந்த முயற்சியில் கடவுள் வேறு அல்லது உயிர் வேறு என்பதாகிய ஒரு அடிப்படை முடிவைப் பெற்றால் அதற்கு பெயர் துவைத மரபு. இதுதான் தொடக்கால அத்வைத, துவைத மரபு.



தொகுப்பாளர்
செல்வி. சதீஸ்வரன் டிலக்ஷனா
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

இந்த மரபில் உருவான கருத்தியல் தான், அடுத்தது உலகம், உயிர் ,கடவுள் என்கிற அந்த மூன்று பொருள்களை உங்களுக்கு முடிவு செய்தது. அப்பொழுது அது சுத்தாத்வைதம் என்பதாகப் பெயர்பெறுகிறது. இதற்கு இடையில் இன்னொரு வரலாறு உங்களுக்கு இணைகிறது. என்ன வரலாறு என்று கேட்டால் இந்த தாந்தீரிக பயிற்சி மேற்கொண்ட காலத்தில் இதற்கு பிறகு கி.மு 1500ல் வந்து சேர்ந்த வைதீக நாகரீகத்துக்கான மூலங்களை கொண்டிருந்த அவர்கள், இந்த மக்களுடைய பயிற்சியின் மரபுக்கு வேறாக தாங்கள் இருப்பதை இணைத்து சிலவற்றை உள்வாங்கியும் சிலவற்றை வேறுபடுத்தியும் அதே சமயத்தில், தங்களுக்கென்ற உரிமை உடையதாக வேள்வி செய்கிற ஒரு மரபை மேற்கொண்டிருந்தார்கள். இந்த வேள்வி செய்கிற மரபுக்கு எதிரான ஒரு தன்மையை இங்கிருந்த தொல்பழங்கால சமூகம் மேற்கொண்டது.

அந்த மரபினுடைய அடையாளமாகத்தான் ருத்திரன் உருத்திரன் என்பவர் வருகிறார். அவர் தான் உங்களுக்கு அந்த வைதீக அல்லது வேள்விக்கான எதிர்ப்பாளராக வருகிறார். அந்த மரபில் தான் நமக்கு எலும்பு மாலை அணிந்த வைரவர் வருகிறார். அதில் தான் வைரவ சமயம் வருகிறது. இதனுடைய இன்னொரு சமயம் என்ற உருவாக்கம் இல்லாமல்

குழு நடவடிக்கையாக தாந்திரீகப் பயிற்சியை இல்லறவியலாக மாற்றிய ஒரு அமைப்போடு கூட செயற்பட்ட ஒரு தொடக்க கால சமய அமைப்பு காபாலிகம்.

இவர்களும் அதே ருத்திர மரபில் வைதீக எதிர்ப்பை மேற்கொண்டு பிராமணன் அதாவது வைதீகனுடைய தலையை கொய்து அதில் பிச்சை எடுக்கிற ஒரு வரலாற்றில் இவர்கள் தலைப்படுகிறார்கள். இப்படி தலைப்பட்ட இவர்களுடைய அந்த வைதீக எதிர்ப்பு தன்மையின் காரணமாகத்தான் பின்னாளில் காபலிகத்தை ஒரு பழங்குடி சமயம் என்றும் காட்டுமிராண்டி சமயம் என்றும் எல்லாம் பிற்கால தத்துவவாளர்களாக இருக்கிற இராமானுஜர் போன்றவர்கள் குறிப்பிட்டார்கள். யாக்கியவல்லியரும் அப்படி குறிப்பிட்டார். இது ஒரு மிக முக்கியமான ஒரு செய்தி. ஆனால் இவர்கள் எல்லோரும் உலகாயுத மரபில் தாந்திரீக மரபோடு கூட இல்லற மரபோடு கூட இந்த சைவத்தினுடைய முதல் கட்டத்தினுடைய அமைப்பாக இருக்கிற ஒரு சமயம். இதுதான் பிறகு காலாமுகமுமாகவும் பிறகு அது வீரசைவமாகவும் மலர்கிறது.

இதற்கு இடையில் காலானா என்ற பெயர், ஆமார்திகா என்ற பெயர், இந்த குகவாசி என்கிற பெயர் இதெல்லாம் பல்வேறு கிளைகளாக வழிநடத்துபவர்களால் கௌலம், குளார்ணவம், சோமசித்தாந்தம் இப்படியான பல பெயர்களில் இந்த காபலிகம் விரிவடைகிறது. ஆனால் இதற்கு மாறாக ஒன்று விரிவடைகிறது அதுதான் லகுலிசம் இந்த லகுலிசத்துக்கு மூலம் பாசுபதம். பாசுபதம் என்பது எது என்று கேட்டால் அந்த பாசுபதம் என்பதுதான் மிக முக்கியமான ஒன்று. அந்த பாசுபதத்தினுடைய அடிப்படை உங்களுக்கு வரலாற்றில் மிகவும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது. இது ஒரு மிக முக்கியமான கட்டம் ஏனென்று கேட்டால் பாசுபதம் என்பதை பத்மாவதி போன்றவர்கள் அல்லது தொல்லியல் ஆய்வாளர்கள் போன்றவர்கள் சைவத்துக்குமான ஒரு மூல சமயமாகவும் அதன் மூலமான கொடையாகத்தான் தமிழ் நாட்டில் சைவம் வந்தது என்பது போலவும் எழுதுகிறார்கள். அது மிகவும் ஒரு மிகத் தொல்பழங்கால விவசாய வேளான் உற்பத்தி சமூகத்தினுடைய தாந்திரீக மரபிலிருந்து கபாலிகமும் அடுத்த கட்டமான சமய வளர்ச்சிக்குமான ஒரு பாதையை மறுப்பதாக அமைந்துவிடும் என்பதை நீங்கள் இங்கே புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியானால் இந்த லகுலிசம் என்பது தொடக்க காலத்தில் அது பாசுபதமாக இருந்து இந்த பாசுபதம் என்பது என்ன என்று கேட்டால் பசு என்கிற ஒரு ஆன்மா அடையக் கூடிய பதம். பதம் என்றால் நிலை. பசு அடைகிற அந்த நிலையை தாந்திரீக மரபில் இருந்த அந்த ஒரு நிலையை உலகாயுதமாக மேற்கொள்ளப்பட்டிருந்த அந்த நிலையை வைதீகம் அல்லது கி.மு.1500 க்கு பிறகு வந்த அவர்களுடைய வைதீக மரபாளர்களுடைய முயயற்சியினால் அவர்கள் மேற்கொண்ட ஒன்று எது என்பதை புரிந்து கொள்வதற்கு மகாபாரத கதை உதவும்.

அர்ஜ/னன் பாசுபதம் பெற்ற வரலாறு அதைப் புலப்படுத்தும். கிருஷ்ணன் என்கின்ற மேச்சல் தலைமை அர்ஜ/னன் என்கின்ற அரசு அதிகாரத்திற்கான ஒரு அடையாளத்தை அதன் மூலமாக சுட்டிக் காட்டுகின்றது. என்ன என்று கேட்டால் பாசுபதம் பெறுவதற்கு கிருஷ்ணன் அர்ஜ/னனை கைலாயத்திற்கு அனுப்புகிறான். ஆனால் கனவிலேயே கைலாயம் சென்று அர்ஜ/னன் பாசுபதம் என்பதை பெறமுயற்ச்சிக்கும் போது அது கண்ணுக்கு இரண்டு பாம்புகளாக தெரிகின்றது. ஆனால் அதைப் பெற முடியவில்லை. பிறகு சிவனிடம் கேட்கிறார்கள் அந்த சிவன் சொல்கிறார் “இந்த குளத்தில் இருக்கும் போய் எடுத்துக்கொள்” என்று குளத்தில் போய் எடுத்தால் எடுக்க முடியவில்லை. பிறகு சிவனிடம் கேட்டு மறுபடியும் எடுக்கிறார்கள் எடுக்கும்போது அது வில்லும் அம்புமாக வருகின்றது. அந்த வில்லும் அம்புமாக வருகின்ற அந்த ஆயுதம் தான் இப்பொழுது சொல்லப்படுகின்ற பாசுபதம் அந்த அம்பு என்பது பாம்பாக பேசப்பட்டு பிறகு அது வடிவங்களை மாற்றி மாற்றி அதை அதிகாரத்தில் கொண்டு வருகிறார்கள். வில் அம்பு என்பது அதிகாரம் அரசியல் ஆனால் பாம்பு பாம்பு என்பது தாந்த்ரீக மரபில் இருக்கிற ஆற்றல் அடையாளம் இந்த ஆற்றல் அடையாளம் அரசு அதிகாரத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது இதுதான் வைதீகத்தினுடைய முதல் கட்ட முயற்சி. இந்த முதல் கட்ட முயற்சி தான் ஒரு மிகப்பெரிய இயக்கத்திற்கான மூலவராக விளங்கியவர் லகுலீசர்.

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

# செங்கோல் ஆதீனக் குருமுதல்வர் குருபூசை விழா

தூத்துக்குடி மாவட்டம் பெருங்குளம் செங்கோல் ஆதீன குருமுதல்வர் சீர்வளர்சீர் சத்தியஞான தரிசினிகள் குருபூசை, 103 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் கடந்த 21-04-2026 அன்று சிறப்பாக நடைபெற்றது. காலை மங்கள இசை மற்றும் ஓதுவார்களின் திருமுறை விண்ணப்பத்துடன் தொடங்கிய விழாவில், ஆதீன குருமுதல்வருக்குச் சிறப்புத் திருமஞ்சனமும் வழிபாடுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் ஆன்மீகம், தமிழ் மற்றும் சமூகப் பணிகளில் சிறந்து விளங்கிய திருச்செந்தூர் குமாரப்பட்டார், சிதம்பரம் முருகசுந்தர் ஓதுவார் உள்ளிட்ட அறுவருக்குத் தலா 5,000 ரூபாய் பொற்கிழியும் விருதுகளும் வழங்கப்பட்டன. மதியம் நடைபெற்ற மாகேசுவர பூசையில் தருமபுரம் ஆதீன திருஞானசம்பந்த தம்பிரான், சிவபுரம் ஆதீனம் சீர்வளர்சீர் திருநாவுக்கரசு சுவாமிகள் மற்றும் இஸ்ரோ



விஞ்ஞானி பத்மசிறீ நடராஜன் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

மாலையில் திருவழுதீசுவரர் திருக்கோயில் வழிபாட்டைத் தொடர்ந்து, குருமுதல்வர் சிவிகையில் பட்டணப் பிரவேசம் கண்டருளினார். இரவு குருமகா சந்நிதானத்தின் சிவஞான கொலுக்காட்சியுடன் விழா நிறைவுபெற்றது. திரளான அடியார்கள் கலந்துகொண்ட இவ்விழா ஏற்பாடுகளைக் காறுபாறு அழகிய திருச்சிற்றம்பலமுடைய தம்பிரான் செய்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்

# அரன் பணி அறக்கட்டளைத் தலைவர் அ. தியாகராசன் ஐயா அவர்களுக்கு 'திருப்பணிச் செல்வர்' விருது



தூத்துக்குடி மாவட்டம் பெருங்குளத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற செங்கோல் ஆதீனத்தின் குருமுதல்வர் சீர்வளர்சீர் சத்தியஞான தரிசினிகள் அவர்களின் குருபூசை பெருவிழாவினை முன்னிட்டு, பவானி அரன்பணி அறக்கட்டளையின் தலைவர் சிவத்திரு. அ. தியாகராசன் அவர்களுக்கு 'திருப்பணிச் செல்வர்' எனும் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

கொங்கு நாட்டின் அனுமன்பள்ளி கிராமத்தில் பிறந்து, சிறுவயது முதலே பவானி சங்கமேசுவரர் கோயிலில் அருட்தொண்டாற்றி இறைபணியில் திளைத்தவர் சிவத்திரு. அ. தியாகராசன். கோயில் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் பண்ணிசைப் பாடல்களைப் பயிற்றுவித்தல், நாயன்மார்களுக்குச் சிலை திருமேனிகள் அமைத்துத் திருவீதி உலா நடத்துதல் எனத் தனது வாழ்வைச் சிவப்பணிக்கே அர்ப்பணித்தவர். குறிப்பாக, அரன்பணி அறக்கட்டளை நிறுவி அதன் மூலம் சிதலமடைந்த சிவாலயங்களைச் சீரமைத்தல் மற்றும் நால்வர் பெருமக்களுக்குக் கற்கோவிலுடன் கூடிய ஆன்மீக அரங்கம் அமைத்தல் போன்ற பணிகளை முன்னெடுத்து வருகின்றார். இவருடைய பணிகளில் சிகரம் வைத்தது போல, உத்தரகோசமங்கை திருத்தலத்தில் மரகத நடராசருக்குப் பொன்னாலான தங்கக் கூரை வேய்ந்த உன்னதத் தொண்டு உலகமெங்கும் போற்றத்தக்கது.

இவரது இத்தகைய அரும்பணிகளைப் பாராட்டி, கடந்த 21.04.2026 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற குருபூசை விழாவில் ஐயா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, உருத்திராக்க மாலை அணிவித்து, 5,000 ரூபாய் பொற்கிழியுடன் 'திருப்பணிச் செல்வர்' என்ற பட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



தென்னாடு முதல்வர் இல்லத்தில் சூரியனார் கோயில் ஆதீனம் எழுந்தருளல் (14-04-2026)



அருட்தோற்றம் புத்தாண்டு சிறப்பு வழிபாடுகள் (14-04-2026)




தெய்வத்தமிழில் நீத்தாரின் திருவடிப்பேற்று வழிபாடுகள் (15-04-2026)



பெயர் சூட்டலும், புனிறு நீக்கல் மற்றும் தொட்டிலிடல் வழிபாடுகளும் (11-04-2026)

# தென்னாட்டு நிகழ்வுகள்













**பங்குனித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (01-04-2026)**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து ஒன்பதாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் நிறைமதி அன்று (01-05-2026 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிற மொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org